விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதின்னான்கு — Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஐப்பசி 26 வியாழக்கிழமை (12.11.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 328




# புலிகளின் செயற்பாடுகளை கட்டுப்படுத்த நடவடிக்கை

## தென்னாபிரிக்கா அறிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை கட்டுப்படுத்தி அவர்களின் சர்வதேச வலையமைப்பை இல்லாதொழிக்கும் இலங்கையின் முயற்சிகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் என தென்னாபிரிக்க சர்வதேச ஒத்துழைப்பு அமைச்சர் மையிட் நிகோனோ தெரிவித்துள்ளார். (14ஆம் பக்கம் பார்க்க)


யாழ்-கொழும்பு நேரடி பஸ் சேவைக்கு தயாரான நிலையில் உள்ள பஸ்களைப் படத்தில் காணலாம்.

## இலங்கைக்கு வழங்கிய கப்பலை மீளப்பெற இந்திய அரசு திட்டம்!

### புலிகளுக்கு எதிரான போர் முடிந்து விட்டதாம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிராக அரசு மேற்கொண்ட போருக்கு உதவியாக இந்தியா வழங்கிய ஆழ்கடல் ரோந்து கப்பல்கள் இரண்டையும் மீளப்பெற்றுக்கொள்ள இந்தியா திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட போருக்கு ஆதரவாக இந்தியா வாரகா மற்றும் விக்ரகா ஆகிய (14ஆம் பக்கம் பார்க்க)

## வடமாகாண தொண்டர் ஆசிரியர்களுக்கு நாளை மறுதினம் நியமனக்கடிதம் வழங்கல்

(திருகோணமலை)

வடக்கு மாகாண பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றும் 530 பேருக்கு ஆசிரியர்உதவியாளர்களாக நியமனம் வழங்கும் வைபவம் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் தலைமையில் நாளைமறுதினம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வைபவத்தில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு நியமனக்கடிதங்களை வழங்கிவைக்கவுள்ளார்.

வடக்கு மாகாணப்பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றும் 530 பேர் தமக்கு (14ஆம் பக்கம் பார்க்க)

## சிவில் நிர்வாகம் ஏற்பட்டதும் காவலரண்களை அகற்ற முடியும்

யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகம் முழுமையாக அமுல்படுத்தப்படும் போதே இராணுவ முகாம்களை முற்றாக அகற்ற முடியுமென யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

எனினும் யாழ்.மாநகரசபைக்குட்பட்ட பகுதியில் வீதிகளில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டுவிட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் (14ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரக் கட்சியின் தேசிய மாநாட்டில் ஜனாதிபதியின் தேர்தல் அறிவிப்பு வராது!

### கட்சி வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய மாநாடு எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெறவுள்ளதுடன் அடுத்தாண்டு நடைபெறப் போவது ஜனாதிபதித் தேர்தலா அல்லது பொதுத்தேர்தலா என்பதையும் தேர்தல் நடத்தப்படும் தினம் குறித்தும் அறிவிக்கப் படும் என ஜனாதிபதியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரான அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவும் கடந்த சில மாதங்களாக தொடர்ந்து கூறிவந்தனர். இருந்த போதிலும் தேர்தல் தொடர்பான அறிவிப்பு (14ஆம் பக்கம் பார்க்க)

## கொலை, கடத்தல் மற்றும் காணாமல் போதல் கடந்த மூன்று வருடங்களில் 15 ஆயிரம் முறைப்பாடுகள்

(கொழும்பு)

கடந்த மூன்று ஆண்டு காலப்பகுதியில் கொலை,கடத்தல் மற்றும் காணாமல் போதல் சம்பவங்கள் தொடர்பில் சுமார் 15 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக விசேட ஆணைக்குழு தெரிவித்துள்ளது. படுகொலைச் சம்பவங்கள், கடத்தல்கள், அடையாளம் (14ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் கப்பல்களை தகர்க்க ஒத்துழைத்த அமெரிக்க அரசு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளை தோற்கடிக்கும் யுத்தத்தின் போது பல சர்வதேச நாடுகள் ஒத்துழைப்பு வழங்கியிருந்ததாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இலங்கை அரசாங்கத்தின் வெளிவிவகார கொள்கைகள் தொடர்பில் சிலர் கடும் விமர்சனங்கள் வெளியிட்டு (14ஆம் பக்கம் பார்க்க)

யாழ்.நகரில் ஒரு மணித்தியாலத்தில் டிஜிற்றல் பனர் பிறிண்டிங்

விளம்பர பதாகைகள்:
வாகன ஸ்ரிக்கர் மற்றும்
படங்கள் கொழும்பு
விலையில் பிறிண்டிங் செய்து கொள்ளலாம்.



கொனிக்கா கலர் லாப் &
சிறி டிஜிற்றல் கலர் லாப்
14, சிறி வெங்கடேசன் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:-0212223493
(C-3702)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்




யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமிடையிலான நேரடி பஸ் சேவை நேற்று ஆரம்பமானது. இச் சேவையை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.அரச அதிபர் க.கணேஷ்,.வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையின் முகாமையாளர் ஆகியோர் தேசியக் கொடியை அசைத்துப் பயணத்தை ஆரம்பித்து வைப்பதையும் பயணத்திற்குத் தயாரான நிலையில் உள்ள பஸ்களையும் படங்க ளில் காணலாம்.

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் யாழ்.மாநகர முதல்வருக்கும் இடையிலான சந்திப்பொன்று நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.மாநகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முன்பள்ளி ஆசிரியர்களின் தேவைகள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளதால் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## உப தபாலகத்தில் வைப்புச் செய்தால் பரிசு

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை உப அஞ்சல் அலுவலகத்தில் நாளை மறுநாள் சனிக்கிழமை சேமிப்புக் கணக்குகளை ஆரம்பிப்போருக்கு பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்பட உள்ளதாக உபதபாலதிபர் தெரிவித்துள்ளார்.

பரிசுப் பொருள்களாக புத்தகப்பை, பேனா, மணிக்கூடு, அப்பியாசப் கொப்பி ஆகிய பொருள்கள் வழங்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-131)

# மீள்குடியமர்ந்த மக்கள் தங்கியுள்ள பகுதிக்கு அமைச்சர் டக்ளஸ் வருவார்

## சமூக சேவைகள் அமைச்சு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை,மன்னார் போன்ற மாவட்டங்களில் நலன்புரி நிலையங்களில் இருந்து யாழ்.மாவட்டத்திற்குள் சொந்த இருப்பிடங்களுக்கு அனுப்பப்பட்டோர் அனைவரும் தங்கி இருக்கும் அனைத்து பகுதிகளுக்குமான விஜயத்தை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொள்ளவுள்ளார் என சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

இதனால் மேற்படி மக்களுக்கு முற்பணமாக வழங்கப்படுகின்ற 5ஆயிரம் ரூபா பணம் அவர்களுக்குரிய உபகரணப் பொதிகள் என்பன அனைத்து மக்களுக்கும் கிடைத்துள்ளனவா என்பதையும் அம்மக்களுக்குரிய 6மாத கால நிவாரணம் ஒழுங்கு முறையில் வழங்கப்படுகின்றனவா என்பதையும் ஆராய்ந்து உடனடியாக தனக்கு உறுதிப்படுத்துமாறு அரசாங்க அதிபர் ஊடாக அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் அவர் பணிப்புரை வழங்கியுள்ளார்.

அத்துடன் அம்மக்களது இருப்பிட வசதிகள்,வாழ்வாதாரம்,வாக்குப் பதிவுகள், உள்ளூரில் இடம்பெயர்ந்து மீளத் தங்களது சொந்த இருப்பிடங்களில் குடியேறியுள்ள குடும்பங்களின் விபரங்கள் போன்றவற்றையும் ஆராய்ந்து தனக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் பணிப்புரை விடுத்துள்ளார். (ச)

## வருண பகவான் திருவிளையாடல்; இறுதிப் போட்டி கைவிடப்பட்டது

(மும்பை)

சுற்றுலா அவுஸ்திரேலிய அணிக்கும் இந்திய அணிக்குமிடையிலான 7-வதும் இறுதியுமான ஒரு நாள் சர்வதேச போட்டி நேற்று மும்பையில் பகல் இரவு ஆட்டமாக நடைபெறவிருந்தது. எனினும் கடும் மழை காரணமாக ஒரு பந்து கூட வீசப்படாத நிலையில் போட்டி கைவிடப்பட்டது. 7 ஒரு நாள் கொண்ட இந்தப் போட்டிகளில் அவுஸ்திரேலியா 4:2 என தொடரைக் கைப்பற்றியதோடு சர்வதேச தர வரிசைப் பட்டியலில் அவுஸ்திரேலியா தொடர்ந்து முதலாவது இடத்திலும் தென்னாபிரிக்கா 2 ஆம், இந்தியா 3 ஆம் இடங்களிலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்.மாநகர சபையில்

# 52 பேருக்கான நியமனங்களுக்கு மூவாயிரம் விண்ணப்பங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையால் விண்ணப்பம் கோரப்பட்ட அட்டவணைப்படுத்தப்படாத பதவியணிகளுக்கு நேற்றுவரை 3ஆயிரத்துக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாநகர சபையில் நிலவும் அட்டவணைப்படுத்தப்படாத பதவியணிகளை நிரப்புவதற்காக கடந்தவாரம் பத்திரிகைகள் ஊடாக விண்ணப்பங்கள்கோரப்பட்டது. குறித்த விண்ணப்பங்களின் பிரகாரம் 52பேருக்கு நியமனங்கள் வழங்கப்படவுள்ளது.

எனினும் மேற்படி பதவிகளுக்காக நேற்று வரை 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

குறித்த பதவிகளுக்கு ஒரு மாத காலத்திற்குள் நியமனங்கள் வழங்கப்படும். அத்துடன் மேலும் 72பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு அடுத்த மாதம் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான அனுமதிகளை வடக்குமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியிடம் கேட்டுள்ளேன் என யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா குறிப்பிட்டார். (ச-5)

# மானிப்பாய் இந்து அணிக்கு யாழில் மகத்தான வரவேற்பு



(யாழ்ப்பாணம்)

மைலோ கிண்ணத்தை வென்ற மானிப்பாய் இந்துக் கல்லூரி அணிக்கு நேற்று மானிப்பாயில் பெரும் வரவேற்பு இடம் பெற்றது.

கொழும்பிலிருந்து நேற்று மாலை யாழ்ப்பாணம் திரும்பிய அணிவீரர்களை யாழ்.பஸ் நிலையத்துக்குச் சென்ற பாடசாலையின் பழைய மாணவர்கள் மற்றும் பெற்றோர், ஆசிரியர்கள் வரவேற்றனர்.

அங்கிருந்து 10மேற்பட்ட வாகனங்களில் ஊர்வலமாக மானிப்பாய்க்கு அழைத்துச் சென்றனர்.

மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் குழுமிநின்ற ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் ஆகியோர் வெடி கொளுத்தி ஆரவாரத்துடன் வரவேற்றனர்.

பின்னர் அங்கிருந்து கல்லூரியின் பாண்ட் வாத்திய இசையுடன் மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கு மாணவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கு அதிபர் சி.சிவனேசன் தலைமையில் வரவேற்பு நிகழ்வு இடம்பெற்றது. இதில் பழைய மாணவர் சங்கச் செயலாளர் உதயசூரியன், வலிகாமம் கல்விவலய உடற்கல்விப் பணிப்பாளர் மு.நடராசா உட்பட்ட பலர் உரையாற்றினார். (ச-5)

# யோகர் சுவாமி ஆச்சிரமத்தில் இலுப்பை மரக்கன்று நடும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறையில் அமைந்துள்ள யோகர்சுவாமி ஆச்சிரமத்தில் இலுப்பை மரக்கன்று நடும் நிகழ்வு இன்று காலை யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் இன்று காலை 9மணிக்கு நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு இலுப்பை மரக்கன்றை நாட்டி வைப்பார்.

இதேவேளை யோகர் சுவாமிகள் தமது ஆச்சிரமத்திற்கு முன்பாகவுள்ள இலுப்பை மரத்திற்கு கீழ் இருந்தே தியானம் செய்தவர் எனவும் இதனால் குறித்த இடத்தில் இலுப்பை மரக்கன்று ஒன்றை நாட்டி வளர்க்கப்பட வேண்டுமென கொழும்புத்துறை மக்கள் கேட்டதற்கிணங்கவே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாக யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார். (ச-5)



அச்சுவேலி இடைக்காடு மகாவித்தியால யத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.கொமர்சல் வங்கி முகாமையாளர் லயன் எஸ்.ரவீந்திரா,சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட இலங்கை வங்கி யின் முகாமையாளர் க.லக்ஷ்மணசர்மா, பாடசாலை முதல்வர் அ.அருந்தவநேசன், மற்றும் விருந்தினர்கள் மாலை அணியப்பட்டு பாடசாலை பாண்ட் வாத்தியக் குழுவின ருடன் அழைத்துச் செல்லப்படுவதையும்,பிர தம விருந்தினர் மாணவி ஒருவருக்கு பரி சில்வழங்குவதையும்படங்களில்காணலாம்.

# கல்குடாவில் அரிய 'காட்டு அணுங்கு' விலங்கினம் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

கல்குடா பொலிஸ் பிரிவின், பாசிக்குடா பகுதியில், அநாதரவான நிலையில், இலங்கையில் அருகிவரும் காட்டு அணுங்கு (எறும்பு தின்னி) விலங்கு ஒன்றை மட்டக்களப்பு வனஜீவராசிகள் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட பாதுகாப்பு அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

பொதுமக்களிடமிருந்து கல்குடா பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் வனஜீவராசிகள் மட்டக்களப்பு சுற்றுவட்டாரப் பாதுகாப்பு அதிகாரி என்.சுரேஸ்குமார் தலைமையில் உதவிப் பாதுகாப்பு அதிகாரி ஏ.டி. பெஞ்சமின், வனஜீவராசி பாதுகாப்பு உத்தியோகத்தர்களான ஜீ.பிரசாந்த், எஸ்.குபேரலிங்கன்,ரீ.தேனுவர, ரீ.தஸநாயக்க ஆகியோர் அடங்கிய குழுவினர் இந்தக் காட்டு அணுங்கு விலங்கைக் கண்டுபிடித்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப்புறமான பெரியபுல்லு மலைக்காட்டுப் பகுதிக்கு, பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் ஒத்துழைப்புடன் கொண்டுசெல்லப்பட்ட இவ்விலங்கு, அங்கு சுதந்திரமாக விடப்பட்டதாக மட்டு. மாவட்ட அரச ஊடக அதிகாரி பி.ரீ. அப்துல் லத்தீப் தெரிவித்தார். (ஓ-6)

# யூ.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தினால் மீள்குடியேறும் குடும்பங்களுக்கு வதிவிடம் அமைப்பதற்கான உதவிக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய மாவட்டங்களின் நலன்புரி நிலையங்களில் இருந்து மீள் குடியேற்றத்திற்கு அல்லது உறவினர், நண்பர்கள் வீடுகளில் வதிவதற்கு அனுமதி வழங்கப்பட்ட சகல குடும்பங்களுக்கும் அவர்களுக்குரிய உதவித் தொகையான 25 ஆயிரம் ரூபாவில் கடந்த மாதம் 20ஆம் திகதியில் இருந்து இம்மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட பின் ரூ. 5 ஆயிரம் காசாக வழங்கப்பட்டது.

இந்த ரூபா 5 ஆயிரம் பெற்றுக் கொள்ளாதவர்கள் உடனடியாக அதனைப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு சகல பிரதேச செயலாளர்களும் உதவி அரசாங்க அதிபர்களும் பணிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கு மேலதிகமாக யூ.என்.சி.ஆர். நிறுவனத்தினால் ரூபா 20 ஆயிரம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் தற்போது நடைபெற்று வருகின்றன. கடந்த 9ஆம் திகதியன்று மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இது சம்பந்தமான விளக்கங்கள் தெளிவாக தெரிவிக்கப்பட்டுள்ளன.

இக் கொடுப்பனவு யாவும் இலங்கை வங்கியூடாக வழங்கப்படும் எனினும் இக் கொடுப்பனவினை பெற்றுக் கொள்வதற்காக இலங்கை வங்கியில் ஏற்கனவே கணக்கு வைத்திருப்பவர்கள் அந்தக் கணக்கின் மூலம் கொடுப்பனவினைப் பெற்றுக் கொள்ளலாம். புதிதாக கணக்கு திறக்கவேண்டியவர்கள் பிரதேச செயலாளர்களினாலும், யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தினாலும் வழங்கப்படும் ஆவணங்களைச் சமர்ப்பித்து எதுவித நிதி வைப்பும் இல்லாமல் புதிதாக கணக்கை ஆரம்பிக்கலாம்.

எனவே இந்த நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு எந்த வாடிக்கையாளரும் புதிதாக காசை வைப்புச் செய்து கணக்கை திறக்கவேண்டிய அவசியமில்லை.

இந்தக் கொடுப்பனவு ஏற்பாடுகள் ஏற்கனவே யூ. என்.எச்.சி.ஆர் நிறுவனத்தி னால் செய்யப்பட்டுள்ளது என்பதையும் கூடிய விரைவில் இந்த நிதி மக்களை சென்றடைவதை உறுதிப் படுத்திக் கொள்ளுமாறு சகல பிரதேச செயலர்களும் உதவி அரச அதிபர்களும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் என்பதனையும் மாவட்டச் செயலகம் அறியத் தருகின்றது. (ஓ)

# புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்டதாக தெரிவித்து கைது செய்யப்பட்ட ஆசிரியரும் மனைவியும் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவு உறுப்பினர்களுக்கு விரிவுரைகளை வழங்கி அவர்களுக்கு தங்குமிடத்தை வழங்கியதாக குற்றஞ் சுமத்தப்பட்டு கைது செய்யப்பட்டுள்ள ஆசிரியரை தடுப்புக் காவலில் வைத்து விசாரணைகளை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

சந்தேக நபரான ஆசிரியரின் செயற்பாடுகள் தொடர்பாக கிடைத்த தகவல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து அவர் கடந்த 28 ஆம் திகதி கைது செய்யப்பட்டதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்தில் அறிக்கையொன்றைத் தாக்கல் செய்துள்ளது .

சந்தேக நபர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் திணைக்களம் கூறியுள்ளது. கொழும்பு மேலதிக நீதவான் குமாரி அபேரத்ன முன்னிலையில் மேலதிக அறிக்கையைச் சமர்ப்பித்துள்ள குற்றப் புலனாய்வுத் திணைக்களம் யாழ்ப்பாணம் திருநெல்வேலி கிழக்கு அரசடி வீதியைச் சேர்ந்த புஷ்பராமலிங்கம் தயான் என்பவரே கைது செய்யப்பட்டிருப்பதாகவும் இவர் ஆசிரியராக கடமையாற்றி வந்ததாகவும் தெரிவித்துள்ளது.

1995 ஆம் ஆண்டு முதல் கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவு முகாம்களுக்குச் சென்று ,இவர் விரிவுரைகளை நடத்தி வந்ததாக தெரிய வந்திருப்பதாகவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.

புலனாய்வுத் தகவல்களைப் பெறும் விதம் சம்பந்தமாக விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களுக்கு அறிவுரைகளை வழங்கும் வகையில் விரிவுரைகளை நடத்தியுள்ள இந்த ஆசிரியர் அவர்களுக்கு தங்குமிடங்களை வழங்கி பாதுகாப்பு வழங்கி வந்ததாகவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தனது அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளது.

சந்தேக நபரின் மனைவியான சுப்ரமணியம் கவிதா என்பவர் பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பாக கைது செய்யப்பட்டு தடுப்புக் காவல் உத்தரவின் பேரில் விசாரிக்கப்பட்டு வருவதாகவும் சந்தேக நபரின் சகோதரரும் விடுதலைப் புலிகளின் அமைப்பில் உறுப்பினராக செயற்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். (ஓ-6)

இதோ மோட்டார் சைக்கிளுக்கான வெற்றியாளர் !

உதயகுமார்
ஜெயமாலினி
இல. 37/5,
இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்



NDB வங்கியின் யாழ் கிளை திறப்பின் போதான குலுக்கலில் புத்தம் புதிய மோட்டார் சைக்கிள் ஒன்றை வென்ற உங்களுக்கு எமது வாழ்த்துக்கள்.

NDB வங்கி

# சரத்பொன்சேகாவிற்கு எதிராக சங்கக்கட்டளையை கொண்டு வர ஏதுவான காரணங்கள் எதுவும் இல்லை

## மாலபே சீலாரத்னதேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

கூட்டுப்படைகளின் தலைமை அதிகாரி சரத்பொன்சேகா ஜனாதிபதித் தேர்தலில் களம் இறங்குவது சம்பந்தமாக அவருக்கு எதிராக சங்கக் கட்டளையைக்கொண்டுவருவதற்கு ஏதுவான எவ்வித காரணங்களும் இல்லை என ஸ்ரீலங்கா சுதந்திர பிக்கு அமைப்பின் கொழும்பு மாவட்ட முன்னாள் உப தலைவர் மாலபே சீலாரத்னதேரர் தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகா தேசத்துரோகி அல்லது நாட்டிற்கு எதிராக செயற்பட்டிருந்தால் அவருக்கு எதிராக சங்கக் கட்டளையை வெளியிட முடியும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் ஜனாதிபதித்தேர்தலில் மோதவுள்ளார் என்பதற்காக அவ்வாறானதொரு கட்டளையை பிறப்பிக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சரத்பொன்சேகாவிற்கு எதிராக சங்கக் கட்டளையை பிறப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக ஊடகங்களில் தகவல்கள் வெளியாகியுள்ளமை தொடர்பாகவே சீலாரத்ன தேரர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சங்கக்கட்டளையை எதிர்நோக்கக் கூடியவர்கள் சரத்பொன்சேகாவைவிட அதிக தகுதிகளைப் பெற்றவர்கள் தற்போதைய அரச நிர்வாகத்தில் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியலுடன் சார்புடைய சில பிக்குகளால் மாத்திரம் சங்கக் கட்டளைகளைப் பிறப்பிக்க முடியாது அதற்கு மூன்று பௌத்த பீடங்களில் மாநாயக்க தேரர்களும் கலந்துரையாடி ஏகமனதான தீர்மானங்களையும் எடுக்க வேண்டும் எனவும் சீலாரத்னதேரர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

# கோகிலாய், கல்குடா பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த சிங்கள குடும்பங்கள் சொந்த இடங்களில் மீளக் குடியேற விருப்பம்

(கொழும்பு)

கோகிலாய் மற்றும் கல்குடா ஆகிய பகுதிகளிலிருந்து யுத்த காலத்தில் இடம்பெயர்ந்து வந்த சிங்கள குடும்பங்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் மீள்குடியேற விருப்பம் தெரிவித்துள்ளனர்.

கோகிலாய் மற்றும் கல்குடா ஆகிய பகுதிகளிலிருந்து 1990 ஆம் ஆண்டு சுமார் 125 சிங்கள குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தங்களை மீளவும் சொந்த இடங்களில் மீள் குடியேற்றுமாறு குறித்த குடும்பங்கள் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கய்ராட்ஸ் தொண்டு நிறுவனத்தினால் பாராளுமன்ற உறுப்பினர் பசில்ராஜபக்ஷவிற்கும் குறித்த சிங்கள இடம்பெயர் மக்களுக்கும் இடையிலான சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. நீர்கொழும்பு, குருணாகல் மற்றும் களுத்துறை ஆகிய பகுதிகளில் தற்போது குறித்த குடும்பங்கள் தங்கியிருப்பதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

இவ்வாறு இடம்பெயர்ந்த மக்களிடம் தங்களது காணிகளின் உறுதிப்பத்திரங்கள் காணப்படுவதாகத்தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)




சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரும் சாவகச்சேரி போக்குவரத்துப் பொலிஸாரும் இணைந்து சாவகச்சேரியில் வாகன சாரதிகளுக்கு போக்குவரத்து சம்பந்தமான கருத்துரைகளை வழங்குவதையும், பஸ் பிரயாணிகளுக்கு இதுசம்பந்தமான துண்டுபிரசுரங்களை வழங்கி விளக்கமளிப்பதையும் படங்களில் காணலாம்.

## செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 9இற்கு ஆங்கிலம் (புதியபாடத்திட்டம்), தரம் 10 ,11 இற்கு குடியியல் பாடம் ஆகியன கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்விற்கு குறித்த ஆசிரியர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஓ-4-19)

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6 முதல் 11 வரையான வகுப்புக்களுக்கு விஞ்ஞான பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை மறுதினம் சனிக்கிழமையும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் காலை 8 மணிக்கு வரணி ஆசிரியர் வள நிலையத்தில் நடைபெறவுள்ளதாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் தெரிவித்துள்ளார். (ஓ-4-29)

## பருத்தித்துறையிலுள்ள 751 பேருந்து வீதியை
# பொது மக்களின் பாவனைக்கு திறப்பது குறித்து ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையிலுள்ள 751 பேருந்து வீதியை பொதுமக்களின் பாவனைக்குத் திறந்து வைப்பதற்கான கலந்துரையாடலொன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பருத்தித்துறை பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் சங்க நிர்வாகிகள், தலைவர் நகர வர்த்தகர்கள் மற்றும் பொது மக்களென நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

இங்கு மேற்படி வீதியை மக்களின் பாவனைக்கு திறந்து வைப்பதற்கான ஆலோசனைகள் மற்றும் தடைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டதுடன் பெற்றோல் நிரப்பு நிலையம் மற்றும் அவ் வீதியிலுள்ள பாடசாலையைத் திறப்பது குறித்தும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

இதன்போது அப்பகுதி படைத் தரப்பினருடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அந்த வீதியைத் திறப்பதன் அவசியம் குறித்து விளக்கமாக எடுத்துக் கூறினார்.

இதேவேளை அவ் வீதியிலுள்ள பெற்றோல் நிரப்பு நிலையம் மற்றும் பாடசாலையைத் திறக்கும் நடவடிக்கைகள் குறித்தும் அங்கு சமுகமளித்திருந்த மக்களுடன் கலந்தாலோசித்ததுடன் அந்த வீதியை பொதுமக்களின் பாவனைக்கு ஏற்ற விதத்தில் திறந்து விடுவதற்கான நடவடிக்கைகளை தாம் மேற்கொண்டு வருவதாகவும் அதே நேரம் பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு சுதந்திரமாக சென்று வருவதற்குரிய வசதியையும் ஏற்படுத்தித் தருவதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

## அதிபர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலய 1AB, 1C,Type -2 பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யாழ்.வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மேற் குறிப்பிடப்பட்ட வகை பாடசாலை அதிபர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ)

## கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் தரம் 10 இற்கு தமிழ் மொழியும் இலக்கியமும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இதில் குறித்த ஆசிரியர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஓ-4-29)

## சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

ஐப்பசி வெள்ளிக்கிழமையை முன்னிட்டு யாழ்- அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப்பிள்ளையார் ஆலயத்தின் (1008) சங்காபிஷேகம் நாளை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

தொடர்ந்து மாலை 4மணிக்கு முருகப்பெருமானுக்கு அபிஷேகம் நடைபெற்று வசந்தமண்டபப் பூசையுடன் முருகப்பெருமான் வள்ளி தெய்வயானை சகிதம் உள் வீதி வலம் வரும் காட்சியும் இடம்பெறவுள்ளது. (ஓ-4)




## கே.ஏ.செல்லையா ஞாபகார்த்த
## ஐந்து வீரர்கள் பங்குபற்றும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டுத்துறையினால் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் கல்லூரியின் முன்னாள் மறைந்த முதல்வர் கே.ஏ.செல்லையா ஞாபகார்த்த ஐந்துவீரர்கள் பங்குபற்றும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி இவ்வாண்டு இரண்டாவது தடவையாக கல்லூரி பிக்னல் மைதானத்தில் முதல்வர் என்.ஏ.விமலேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, மானிப் பாய் இந்துக் கல் லூரி, தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப் பாணக் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி, யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி, இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி ஆகிய பதினொரு அணிகள் மோதவுள்ளன.



கடந்தமுறை நடைபெற்ற இப் போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இப்போட்டியினை யாழ்.மண்ணில் கடந்த 2007 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினர் முதன் முறையாக அறிமுகப்படுத்தியிருந்தார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (ஓ-27)

## வாசிப்பு மாதத்தை ஊக்குவிக்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரமத்தால் நடத்தப்படும் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நிகழ்வு பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு வித்தியாலய அதிபர் சி.இராமலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அப் பாடசாலையில் 6, 7 வகுப்புக்களில் கல்வி பயிலும் மாணவர்கள் பங்குபற்றவுள்ளதுடன் சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா கலந்துகொள்ளவுள்ளார். (ஓ-4)

## கற்றல் முகாம்

(சாவகச்சேரி)

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கான தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்திற்கான கற்றல்முகாம் நாளை மறுதினம் சனிக்கிழமையும் 15 ஆம்திகதி ஞாயிறுக்கிழமையும் காலை 8 மணிக்கு தெரிவுசெய்யப்பட்ட இணைப்பு நிலையங்களில் நடைபெறவுள்ளதாக தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஓ-4-29)

## வாசிப்புமாத இறுதிநாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பிரதேச சபையையும், நாவற்குழி பொதுநூலக ஆலோசனை அபிவிருத்தி சபையும் இணைந்து நடத்தும் தேசிய வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் இன்று வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நாவற்குழி பொதுநூலகத்தில் சாவகச்சேரி பிரதேசசபை செயலாளர் வே. சிவராஜலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்து சிறப்பிப்பதுடன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் சாவகச்சேரி பொறுப்பாளர் சாள்ஸ் அலெக்சாண்டர், நாவற்குழி மகாவித்தியாலய அதிபர் திருமதி வ. மேகலிங்கம், கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை அதிபர் எஸ். சோமசுந்தரம் , கோயிலாக்கண்டி மகாலக்சுமி வித்தியாலய அதிபர் திருமதி செ. முத்துலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-4)

## உரும்பிராயில்
# கசிப்பு அருந்துபவர்கள் தொல்லை வீதிகளில் பயணிப்போர் விசனம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் மேற்குப் பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தி அதிகரித்துள்ள நிலையில் மாலை வேளைகளில் உரும்பிராய் மேற்கு அன்னுங்கை வீதியில் பிரயாணம் செய்பவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாலைவேளைகளில் மதுஅருந்திவிட்டு செல்பவர்கள் அவ் வீதியில் பயணிப்பவர்களிடம் தவறாக நடக்க முயற்சிப்பதாகவும் இரவு வேளைகளில் தெருக்களில் கூட்டமாக நின்று ஒருவருக்கு ஒருவர் மோதிக் கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மதுப்பாவனையாளர்களின் அட்டகாசம் தாங்க முடியாது இரவு வேளைகளில் பொதுமக்கள் அவ் வீதியூடாகப் பயணிப்பதைத் தவிர்த்து வருவதாகவும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

அப் பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தி அதிகரித்த நிலையில் அப்பகுதியைச் சேர்ந்த இளம் பராயத்தினரும் மதுப்பாவனைக்கு அடிமையாகுதல் அதிகரித்துச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கசிப்பு உற்பத்தியாளர்களைப் பொலிஸார் கைது செய்து நீதிமன்றங்களினூடாக தண்டனை வழங்குகின்ற போதும் கசிப்பு உற்பத்தியில் அவர்கள் ஈடுபட்டு வருவதாகவும் அதிகரிப்பின் காரணமாக தண்டப் பணத்தைச் செலுத்திய மறுநாளே அவர்கள் மீண்டும் அவ் உற்பத்தியை நாடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை உரும்பிராய் மேற்குப் பகுதியில் தற்போது இளைஞர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனையும் உருவெடுத்துள்ளதாக அப் பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ஓ-14)

# நாடும் மக்களும்

50

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடந்த ஆய்வரங்கச் சிறப்புரைகள் - 2009

கலாநிதி
**தெ.வே.மகாலிங்கம்**

மிகப் பல நகரங்கள் என்று அவர் குறிப்பிடுகிறார். பேரரசில் மாபெரும் நகரங்கள், கிராமங்கள், கோட்டைகள்பல இருந்தன என்று பார்போசா கூறுகிறார். நாடு முழுவதுமே மக்கள் நெருக்கமாகவே வசித்தனர் என்ற பியாசின் கூற்று இதை உறுதி செய்கிறது.

ஆகவே அந்தப் பேரரசில் நகர மையங்கள் பல நிறைந்திருந்தன என்பதையே பல விவரங்களும் மெய்ப்பிக்கின்றன. முன்பு விஜயநகரப் பேரரசு வியாபித்திருந்த அதே நிலப்பரப்பில் இப்போது 450 நகரங்கள் வியாபித்துள்ள என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

அநேக பட்டணங்கள் பழமையானவை. சில மட்டுமே விஜயநகர ஆட்சியின் போது தோன்றியவை.

இப்புதிய பேரூர்களும் பட்டணங்களும் தோன்றி வளர்ச்சியடைவதற்குப் பல காரணங்கள் துணைபுரிந்தன. தெய்வத் தன்மை பொருந்திய கோவில்கள் இருந்த ஊர்களுக்கு மக்கள் புனித யாத்திரை செய்யவும், அங்கே தங்கியிருந்து நல்வாழ்வு நடத்தவும் விரும்பினர்.

வியாபாரத்தின் பொருட்டு பொருட்களை வாங்குவதற்கும் விற்பதற்கும் வசதியுள்ள இடங்களில் சந்தைகள் கூடுவது வழக்கம். இவ்விதம் சந்தைகள் கூடிய இடங்கள் பேரூர்களாக வளர்ந்தன. பேரரசு பல மாகாணங்களாகப் பிரிக்கப்பெற்றிருந்தது. கிருஷ்ண தேவராயர் தன்னுடைய மனைவி நாகலா தேவியின் நினைவாக நாகலாபுரி என்ற பேரூரைத் தோற்றுவித்து அப்புதிய நகரில் தங்களுடைய அரண்மனைகளை அமைத்துக் கொள்ளும்படி தன்னுடைய நாயக்கர்களுக்கு ஆணையிட்டிருந்தார்.

பொதுவாகக் கூறுமிடத்து, விஜயநகர ஆட்சிக்காலத்தில் பேரூர்கள் திட்டமிட்டு அமைக்கப் பெறவில்லை. பெரும்பான்மையில் கிராமங்களே பேரூர்களாகவும், பட்டணங்களாகவும் வளர்ந்தன. இட வசதியுள்ள கிராமங்கள் பேரூர்களாக வளர்ச்சியடைந்தன. எதிரிகளின் படையெடுப்புக்களிலிருந்து நகரங்களைக் காப்பாற்றுவதற்கு கோட்டைச்சுவர்கள் அமைக்கப் பெற்றிருந்தன. விஜயநகரத்தின் மதிற்சுவர் அறுபது மைல் சுற்றளவிற்கு நீண்டிருந்ததாக நிக்கோலோ - டி-காண்டி என்பார் கூறுவர். பெரிய நகரங்களில் வசித்த மக்களுடைய தேவைப் பொருட் களில் பல கிராமங்களில் இருந்து தான்கிடைத்தன. பட்டணங்களிலும் நகரங்களிலும் பலவிதமான கைத்தொழில்கள் வளர்ந்து அங்கே உற்பத்தி செய்யப் பெற்ற பொருட்கள் பட்டணங்களிலிருந்து வெளியேயும் ஏற்றுமதியாயின.

விஜயநகரப் பேரரசின் மேற்குப் பகுதியில் அங்கோலா, மீர்ஜான், ஹோனவார், பட்கல், மாசாந்தூர், வரகுர், பாகரூர், மங்களூர், கம்பளத்தூர் முதலிய முக்கிய பட்டணங்கள் இருந்தன.

சங்கீதபுரம், பாரங்கி, (Bharangi) உத்திரை ஹொர்சோப்பா பெட்னூர் என்ற முக்கிய இடங்களும் இருந்தன. பேரரசின் மத்தியப் பகுதியில் ஸ்ரீரங்கப் பட்டினம், துவார சமுத்திரம் இக்கேரி, பங்காபுரம், இராய்ச்சூர், சூதோணி, விஜயநகரம், பெனுகொண்டா முதலிய பட்டணங்களும் நகரங்களும் இருந்தன. கொண்டவீடு, ஸ்ரீசைலம், உதயகிரி முதலிய நகரங்கள் பேரரசின் தெற்குப் பகுதியிலும், காளத்தி, திருப்பதி, சந்திரகிரி, பழவேற்காடு, மைலாப்பூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, சிதம்பரம், கும்பகோணம், தஞ்சாவூர், நாகப்பட்டினம், முதலிய பட்டணங்களும், பட்டினங்களம், கிழக்குப் பகுதியில் இருந்தன. திருவரங்கம், மதுரை, ஸ்ரீவில்லிபுத்தூர், திருநெல்வேலி, இராமேச்சுரம், திருவனந்தபுரம் முதலியன பட்டணங்கள் பேரரசின் தெற்குப் பகுதியிலும், கிழக்கிலும் அமைந்திருந்தன.

### மக்கள் தொகை

விஜயநகரப் பேரரசில் சுறுசுறுப்பான வியாபாரம் நடைபெற்றமையால் மக்கள் தொகையும் அதிகமாக இருந்ததென நாம் உணரக்கூடும். ஆயினும் மௌரியப் பேரரசில் நடைபெற்றது போன்று மக்கள் தொகை கணக்கெடுப்பு இன்மையாலும், போதுமான ஆதாரங்கள் இன்மையாலும், பேரரசின் மக்கள் தொகை இன்னதென வரையறுத்துக் கூறுவதற்கில்லை. விஜயநகர ஆட்சியின் அந்நிய நாடுகளிலிருந்து தென்னிந்தியாவிற்கு வந்திருந்த தூதர்கள், வியாபாரிகள் மற்றும் வழிப் போக்கர்கள் முதலியோருடைய கூற்றுக்களில் இருந்தே அப்பொழுதிருந்த மக்கள் தொகையை குற்று மதிப்பாகக்கூற வேண்டியிருக்கிறது. மேற்கூறப் பெற்றவர்கள் தங்களுடைய நாடுகளை ஒப்பிட்டே தென்னிந்தியாவின் சனத்தொகையை ஒருவாறு மதிப்பிட்டுள்ளனர்.

1420 ஆம் ஆண்டில் விஜயநகரப் பேரரசிற்கு வந்த நிகோலோ - டி-காண்டி என்பார், இந்நாட்டில் தன்னால் நம்பமுடியாத அளவிற்கு ஜனத்தொகை இருந்ததெனக் கூறியுள்ளார்.

இருபதாண்டுகளுக்குப் பின் போந்த அப்துர் ரசாக் என்பார் பேரரசில் மக்கள் தொகை மிகுந்து இருந்ததெனவும், ஆனால் உத்தேச எண்ணிக்கையை தகுந்த ஆதாரத்துடன் தன்னால் கணக்கிட முடியாதெனவும் கூறியுள்ளார். பேரரசின் மேற்கில் இருந்த தெலி மலை யிலிருந்து (Mount Dely) கொல்லம் வரையில் ஒரே மக்கள் மயமாக இருந்ததென பார்போசா என்பார் சாற்றியுள்ளார். 1520ஆம் ஆண்டில் போந்த பீயாஸ் என்னும் போர்த்துக்கீசி ஆயர் விஜயநகரப் பேரரசு முழுவதிலும் பட்டணங்களும் கிராமங்களும் நிறைந்திருந்ததெனக் கூறியுள்ளார்.

இரண்டாம் தேவராயர் காலத்தில் விஜய நகரத்திற்கு வந்த அப்துர்ரசாக் "தான் இதுகாறும் கண்களால் காணப்பெறாததும் செவிகளால் கேட்டறியாத அளவிற்கு செழிப் புற்று இருந்ததெனவும் அந்நகரத்தில் மக்கள் மிக்க நெருங்கி வாழ்ந்தனர் என்றும் கூறுவர். இந்நகரத்தில் ஆயுதம் தாங்கக் கூடிய போர் வீரர்கள் மாத்திரம் 90ஆயிரம் பேர் இருந்தனரென்று நிகோலோகாண்டி கூறியுள்ளார். அழகிய அரண்மனைகள் நிறைந்த விஜயநகரத்தில் வளமுற வாழ்க்கை நடத்திய கணக்கற்ற செல்வர்களும் வியாபாரிகளும் வாழ்ந்தனர் நகரத்தின் தெருக்கள் நீளமாக இருந்தன.

நான்கு தெருக்கள் கூடும் இடங்களில் உள்ள சதுரமான வெற்றிடங்களில் கணக்கற்ற மக்கள் கூடியிருந்தனர் என்று பார்ப்போசா கூறியுள்ளார். விஜயநகரம் உரோம் (Rome) நகரத்தை விட பெரியது. அந் நகரத்தின் சனத்தொகையைப் பற்றி நான் கூறினால் ஒருவரும் நம்பமாட்டர்கள். போர் வீரர் கள் குதிரைகளும் நுழைந்து செல்ல முடியாத படி மக்களும் யானைகளும் வீதிகளில் நிரம்பி இருந்தன. ஒரு மாடி உள்ளதும் மாடி கள் இல்லாததுமான வீடுகள் ஒரு இலட்சத் திற்கும் மேல் இருந்தன என்று பீயாஸ் கூறியுள்ளார்.

இவருடைய கூற்றின்படி ஒரு வீட்டிற்கு 5நபர் என சராசரியாகக் கொண்டாலும் 5 இலட்சத்திற்கும்மேற்பட்ட மக்கள் விஜயநகரத்தில் இருந்தனர் எனக்கொள்ளலாம். மதிற்சுவர் சூழ்ந்த அரண்மனையில் வாழ்ந்த அரசவமிசத்தவர்களையும் அரண்மனையிலிருந்த அலுவலர்களையும், வீரர்களையும் அவர்களுடைய ஏவலாட்களையும் கணக்கிட்டால் இத்தொகையை இன்னும் அதிகமாகவே கூறலாம். நகரத்தைச் சுற்றி வாழ்ந்த மற்ற மக்களின் எண்ணிக்கையும் அதிகமாகவே இருந்திருக்கும். (தொடரும்)

---

## பொதுமக்கள் தமது குறைகள் தொடர்பில்

# பொலிஸ்மா அதிபரை சந்திப்பதற்காக பொதுமக்கள் உதவி நிலையம் திறப்பு

(கொழும்பு)

பொதுமக்கள் தமது குறைகள் தொடர்பில் பொலிஸ்மா அதிபரை நேரடியாகச் சந்தித்து தெரிவிப்பதற்கான பொதுமக்கள் உதவி நிலையம் ஒன்று பொலிஸ் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் காலை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. ஒவ்வொரு வெள் ளிக்கிழமைகளிலும் முற்பகல் 11.30 மணிமுதல் பிற்பகல் 2.30 மணிவரையான காலப்பகுதி யில் பொலிஸ் மா அதிபரை பொதுமக்கள் நேரடி யாகச் சந்திக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இதேவேளை 24 மணிநேர சேவையிலுள்ள மேற்படி நிலையத்தில் தமதுகுறைகள் மற்றும் உதவிகள் தொடர்பில் அறிவிக்க விரும்புவர்கள் 011-2430913, 011 -2421111-495 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாகவோ, 011-2430914 என்ற தொலை நகலுடனோ அல்லது publicassist@police.lk என்ற மின்னஞ்சல் முகவரியுடனோ தொடர்பு கொண்டு அறிவிக்கமுடியும்.

நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் பொலிஸ் தலைமையகத்தில் பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரிய மற்றும்தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் லக்ஷ்மன் ஹுலுகல்ல உள்ளிட்ட பாதுகாப்பு உயரதிகாரிகளினால் பொதுமக்கள் உதவி நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

இதனையடுத்து அனைவர் மத்தியிலும் உரையாற்றிய பொலிஸ் மா அதிபர் கூறுகையில், மக்களுக்காக சிநேகபூர்வமானதும் தொழில் ரீதியானதும் புகழ்வாய்ந்ததுமான பொலிஸ்சேவையை உருவாக்குவதையே கொள்கையாகக் கொண்டுள்ள பொலிஸ் திணைக்களம், தனது கொள்கையினை இனிதே நிறைவேற்ற வேண்டுமாயின் பொது மக்களுக்கும், பொலிஸ் மா அதிபருக்கும், பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் இடையிலான தொடர்பு மேம்படுத்தப்பட வேண்டும். அதற்கு எம்மிடையே சிறந்ததொரு புரிந்துணர்வு ஏற்படுத்தப்படவேண்டும்.

அந்த வகையில் பொதுமக்களுக்கு உதவி வழங்கும் திட்டமாகவே இந்தப் பொது மக்கள் உதவி நிலையம் திறக்கப்பட்டுள்ளது. இதன்மூலமாக மக்களின் குறைகள் கேட்டறியப்பட்டு அதற்கான தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்படும். இந்த சேவையானது 24 மணிநேரமும் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை மக்களுடன் நேரடியாகத் தொடர்புகொண்டு அவர்களின் குறைகள் தொடர்பில் அறிந்துகொள்வதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அந்த நடைமுறைகள் நாளை வெள்ளிக்கிழமை முதல் பிரதி வெள்ளி தோறும் அமுலுக்கு கொண்டு வரப்படும்.

பொலிஸாருக்கு எதிரான முறைப்பாடுகளை மாத்திரம் ஏற்றுக்கொள்ளும் முகமாக இந்த நிலையம் அமைக்கப்படவில்லை.

பொலிஸ் நிலையங்களில் செய்யப்படும் முறைப்பாடுகள் தாமதமாக்கப்படும் பட்சத்திலும் முறைப்பாடுகள் தொடர்பான உடனடி நிவாரணங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டிய தேவை ஏற்படும் போதும் இந்த நிலையத்தில் முறைப்பாடு செய்யமுடியும்.

அத்துடன் நாட்டின் அனைத்துப் பாகங்களிலுமுள்ள அனைத்து இனமக்களும் தமது முறைப்பாடுகள் தொடர்பில் இங்கு அறிவிக்க முடியும். அவர்களின்தேவையைக் கருத்திற் கொண்டு அதற்கானதொரு சிறந்த தீர்மானம் இங்கு பெற்றுக்கொடுக்கப்படும் என்றார். (ஓ-6)

## தவறவிடப்பட்ட பொதிகள்

(யாழ்ப்பாணம்)

வவுனியா நலன்புரி நிலையங்களிலிருந்து அழைத்து வரப்பட்டவர்களால், துரையப்பா விளையாட்டரங்கில் தவறவிடப்பட்ட சில பொதிகள் யாழ்ப்பாணம், பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு தவறவிடப்பட்ட பொதிகளுக்குரியவர்கள் அவற்றிற்குரிய ஆதாரங்களைச் சமர்ப்பித்து தங்களது பொதிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் அறிவித்துள்ளார். (ச)

## ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச்சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக தொடரில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு காரைநகர் கிழவன்காடு கலாமன்ற மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெறவுள்ளது. (ஓ-35)

## சமய அறிவு பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவினால் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக்கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக்கல்வி அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் முழுமையான ஒத்துழைப்புடன் நடத்தப்படும் சமய அறிவுப்பரீட்சை நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளதாகவும் இப் பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்கள் அனைவரும் தற்போது தாம் கல்வி பயிலும் பாடசாலைகளிலேயே பரீட்சை எழுதுதல் வேண்டும் எனவும் யாழ். மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவின் தலைவர் மு.செ.சரவணபவ தெரிவித்துள்ளார்.

அத்துடன் யாழ். மாவட்டத்திலுள்ள 164 பரீட்சை நிலையங்களிலிருந்து 12ஆயிரத்து 164 மாணவர்கள் இப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளதாகவும் பரீட்சை சிறப்பாக நடைபெற அனைவரும் ஒத்துழைப்பு வழங்குமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ-6)

## யாழ்ப்பாண மாவட்டத்தில்

# வெள்ள அனர்த்தங்களுக்கான வாய்ப்புக்களும் வெள்ள அழிவுகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளும்

இயற்கை அனர்த்தப் பாதிப்புக்களுக்கு இடம், காலம் என்பன ஒருபோதும் தடையாக இருப்பதில்லை. இருந்ததுமில்லை. இவை எங்கும் எப்போதும் தோன்றலாம். அனர்த்த வாய்ப்புக்கள் குறைவானதென கருதப்பட பல பகுதிகளில் அண்மைக்காலங்களில் இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்டிருப்பதாக அறிகிறோம்.

இவ்வியற்கை அனர்த்தங்களில் காலநிலை அனர்த்தங்கள் அதிக முக்கியத்துவம் பெற்றவையாக மாறியுள்ளன. உலகளாவிய ரீதியில் உள்ள காலநிலை மாற்றத்தின் விளைவாக காலநிலை அனர்த்தங்கள் அடிக்கடி தோன்றுகின்ற அதேவேளை இவற்றினுடைய அழிவுகளும் அதிகமானவையாகக் காணப்படுகின்றன.



பலரது கவனத்தையும் ஈர்த்துள்ள இவ்வியற்கை அனர்த்தங்களுக்கான வாய்ப்புக்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கும் அதிகமாகவே உள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய காலநிலை அனர்த்தங்களாக சூறாவளி, வெள்ளப்பெருக்கு, வரட்சி என்பவற்றைக் குறிப்பிடலாம்.

### காலரீதியான வாய்ப்புக்கள்

யாழ்ப்பாண மாவட்டத்தின் கடந்த முப்பது ஆண்டுகால வரலாற்றில் வெள்ளப் பெருக்கின் பாதிப்புக்கள் அதிகமாக இருந்துள்ளன.

யாழ். மாவட்டம் வெள்ள அனர்த்தத்துக்கான வாய்ப்புக்களை அதிகம் கொண்டுள்ளது. மாவட்டத்தின் புவியியல் அமைப்பும் இதற்கான வாய்ப்புக்களை வழங்குகின்றது.

யாழ். மாவட்டத்தில் வெள்ள அனர்த்தம் ஏற்படுவதற்கான பிரதான மூலமாக மழையே காணப்படுகின்றது. இலங்கையின் ஏனைய பகுதிகள் போல ஆறுகளோ, பாரிய குளங்களோ யாழ். மாவட்டத்தில் காணப்படவில்லை.

எனவே வெள்ளப்பெருக்கிற்கான பிரதான காரணம் மழையே ஆகும்.

மழையைப் பொறுத்தவரை யாழ். மாவட்டத்திற்கு பின்வரும் மூன்று வழிகளில் மழை கிடைக்கின்றது.

1) வடகீழ்ப்பருவக்காற்று

2) மேற்காவுகை

3) சூறாவளி, தாழமுக்கம் என்பவற்றின் மூலமே யாழ். மாவட்டத்திற்கு மழை கிடைக்கின்றது.

யாழ். மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழைவீழ்ச்சியாக 1231.3 மி.மீ மழை வீழ்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் இது காலரீதியாகவோ அல்லது இடரீதியாகவோ சமமானதாகக் காணப்படவில்லை. காலரீதியாக யாழ். குடாநாட்டில் ஒக்டோபர் 20 முதல் டிசம்பர் 10 வரையும், மார்ச் 20 முதல் ஏப்ரல் - 20 வரையான காலப்பகுதிகளிலேயே அதிக மழை கிடைப்பதனை அறியலாம்.

இதனைவிட செப்ரெம்பரின் இறுதிப் பகுதி, யூலையின் நடுப்பகுதியிலும் மழை கிடைக்கின்றது. இது யாழ்ப்பாணத்தின் பொதுவான பருவகாலங்களில் கிடைப்பது அவதானிக்கப்படுகின்றது. இதனைவிட அண்மைய 10 ஆண்டு காலத் தரவுகளின் அடிப்படையில் பார்க்கும் போது யாழ். குடாநாட்டின் ஆண்டுச்சராசரி மழைவீழ்ச்சியான 1231.3 மி.மீ இன் பெரும்பகுதி வங்காள விரிகுடாவில் ஏற்படுகின்ற தாழமுக்கத்தினாலேயே கிடைக்கின்றது.

அமுக்க வீழ்ச்சி, அதாவது சராசரி அமுக்கமான 1013mb இலிருந்து எவ்வளவுக்கு குறைகின்றதோ அதே அளவுக்கு யாழ். குடாநாட்டிற்கு கிடைக்கின்ற மழைவீழ்ச்சியிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

இது சிலசமயங்களில் புயலாகவோ, சூறாவளியாகவோ விருத்தியடைந்தால் அதுவும் யாழ். குடாநாட்டின் மழைவீழ்ச்சியில் செல்வாக்குச் செலுத்துவதனைக் காணலாம். யாழ். குடாநாட்டின் மொத்த மழைவீழ்ச்சியில் 90% மான பங்கிற்கு மேல் வங்காளவிரிகுடாவில் ஏற்படுகின்ற தாழமுக்க வேறுபாடுகளினாலேயே கிடைக்கின்றது எனலாம்.


குடாநாட்டின் மழைக்கால நாட்கள் என்பது மிகக் குறைவாகும். இது 07 அல்லது 08 நாட்களுக்குள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது எனலாம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் மொத்த மழைவீழ்ச்சியில் 85% இற்கும் அதிகமான பங்கு 07 அல்லது 08 நாட்களுக்குள்ளேயே கிடைத்துவிடுகின்றது.

குறுகிய நாட்களுக்குள் கிடைத்து விடுகின்ற அதிகூடிய மழைவீழ்ச்சி காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்றது. மண்ணின் ஊடுபுகவிடும் அளவுக்கு (Infiltration Capacity) அதிகமான மழைவீழ்ச்சியும், போதிய ஒழுங்கான வெள்ள வடிகால் முகாமைத்துவம் இல்லாத காரணத்தினாலும் கிடைக்கின்ற அதிகளவான மழைவீழ்ச்சி வெள்ளப்பெருக்கை ஏற்படுத்துகின்றது.

வெள்ளப் பெருக்கினை ஏற்படுத்தக் கூடிய கன மழைவீழ்ச்சிக்குரிய காலமாகப் பெரும்பாலும் நவம்பர் 12 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரையே காணப்படுகின்றது. இதனைவிட மார்ச் 18 முதல் மார்ச் 30 வரையான காலங்களையும் குறிப்பிடலாம்.

ஆனால் இக்காலத்தில் மட்டுமே யாழ். குடாநாட்டிற்கான வெள்ளப் பெருக் குக்கான வாய்ப்புள்ளது எனக் கருத முடியாது. ஏனெனில் வங்காள விரிகுடாவில் தாழமுக்கம்



ஏற்படுகின்ற காலங்களிலும் அதன் வீரியத்தைப் பொறுத்தும் வெள்ளப் பெருக்கிற்கான வாய்ப்புள்ளது.

மத்திய கோட்டிற்கு சூரியன் உச்சம் கொடுக்கும் காலப்பகுதிகளில் கிடைக்கும் நேரடியான கதிர்வீச்சின் மூலம் பெறப்படும் அதிக வெப்பம் வங்காளவிரிகுடாவில் தாழமுக்கத்தினை ஏற்படுத்தலாம்.

இதனைவிட அயன இடை ஒருங்கல் வலயத்தின் நகர்ச்சி (Movement of the inter tropical convergence soon) (ITCZ) அருவித்தாரை (Jet stream) அம்மொன்சூனின் உடைப்பு (Break of the monsoon) பின்வாங்கும் மொன்சூன் (Retreat of the monsoon) போன்ற காலத்திலும் வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் ஏற்பட்டு யாழ். குடாநாட்டுக்கு அதிக மழை கிடைப்பதற்கான

**நா. பிரதீபராஜா**
விரிவுரையாளர், புவியியற்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

எனினும் யாழ். குடாநாட்டின் கடந்த கால வரலாற்றில் (தரவுகளின்படி) நவம்ர் மாதம் 12 ஆம் திகதிக்குப் பின்னரும் (நவம்பர் 12-29) மார்ச்சின் பிற்பகுதியிலுமே அதிக மழை வீழ்ச்சி கிடைக்கப்பெற்று வெள்ளப்பெருக்கினை ஏற்படுத்தும் நிலைமை காணப்படுகின்றது. (தொடரும்)

# ஓசியானிக் வைக்கிங் கப்பலில் உள்ள இலங்கையரை பொறுப்பேற்க முடியாது

## நியூசிலாந்து அறிவிப்பு

(கொழும்பு)

இந்தோனேஷியக் கடற்பரப்பில் ஓசியானிக் வைக்கிங் எனப்படும் சுங்கக் கப்பலில் உள்ள இலங்கை அகதிகள் 78 பேரையும் அவுஸ்திரேலிய வேண்டுகோளுக்கிணங்க தன்னால் பொறுப்பேற்க முடியாதென நியூசி லாந்து தெரிவித்துள்ளது.

இந்தப் பிரச்சினை குறித்து தங்கள் அரசாங்கத்துடன் அவுஸ்திரேலியா பேசியதை உறுதிப்படுத்திய நியூசியலாந்து குடிவரவு அமைச்சர் ஜோநாதன் கோல்மன், "ஏற்கனவே நியூசிலாந்துக்குள் நுழைய முயற்சி செய்தோரை சமாளிப்பதில் போதும் போதும் என்றாகி விட்டது" என்று கூறினார்.

அவுஸ்திரேலியாவை நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் கடலில் மூழ்கிய படகு ஒன்றிலிருந்து காப்பாற்றப்பட்டு 3 வாரங்களின் பின்னர் கரையிறங்க மறுக்கும் அகதிகள், இந்தோனேஷிய தடுப்புக் காவல்முகாம் ஒன்றிலேயே விசாரிக்கப்பட வேண்டும்.

ஆனால் "ஓசினியாக் வைக்கிங்" கப்பல் அகதி களுடன் நாளை வெள்ளிக்கிழமை அதன் கடற்பரப்பிலிருந்து வெளியேறி விட வேண்டும் என்று இந்தோனேஷியா தெரிவித்துள்ளது.

ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் ஆயிரக் கணக்கான அகதிகள் தரித்து நிற்கிறார்கள் என கோல்மன் தெரிவித்துள்ளார்.

ஓசியா னிக் வைக்கிங் கப்பலைப்போன்று ஒவ் வொரு சம்பவத்தையும் தனித்தனியாக அணுகுவதன் மூலம் உரிய பயன் கிடைக்கும் என்று நியூசிலாந்து அரசாங்கம் நம்பவில்லை என்றும் அவர் கூறினார்.

இவ்வாறு நடந்துகொள்வது எதிர்காலத்தில் எழக்கூடிய இதுபோன்ற சம்பவங்களுக்குத் தீர்வுகாண உதவமாட்டாது என்றும் நியூசிலாந்து அமைச்சர் கோல்மன் தெரிவித்தார்.

நியூசிலாந்து, அவுஸ்திரேலியா, இந்தோனேஷியா,இலங்கை மற்றும் ஆசிய பசிபிக் பிராந்தியத்திலுள்ள 39 நாடுகள் கைச்சாத்திட்ட பல்தர திட்டமான பாளிமுறைமையே, மக்கள் சட்டவிரோதமாக வேற்று நாடுகளுக்கு கடத்தப்படுவது மற்றும் படகு மக்கள் போன்ற பரந்த அளவிலான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண சிறந்த வழியாகும் என்று தமது அரசாங்கம் நம்புவதாகவும் கோல்மன் தெரிவித்தார். (ஓ-6)

# நேபாளத்தில் மாவோயிஸ்டுகள் முற்றுகை

(காத்மாண்டு)

நேபாள அதிபரின் அரசியல் போக்கை கண்டித்து காத்மாண்டுப் பள்ளத்தாக்கை மாவோயிஸ்டுகள் நேற்றுமுன்தினம் முற்றுகையிட்டுள்ளனர்.


நேபாளத்தில் மார்க்சிஸ்ட் - மாவோயிஸ்டுகள் தலைமையிலான அரசு நடந்து வருகிறது. அதிபர் ராம்பரண் யாதவ், இராணுவத் தளபதியை பதவியில் இருந்து நீக்கினார். இதைக் கண்டித்து முன்னாள் பிரதமர் பிரசாந்தா தனது பதவியை ராஜி ணாமா செய்தார். அதன்பின் வந்த பிரதமர் புஷ்ப கமல் தகலும் ராஜினாமா செய்தார்.

இதைத்தொடர்ந்து நேபாளத்தில் இராணுவம் தான் ஆட்சி செய்கிறது. சிவிலியன் நிர்வாகம் வரவேண்டும் என்று கோரி மாவோயிஸ்டுகள் பல்வேறு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் அதி காலை காத்மாண்டுப் பள்ளத்தாக்கை மாவோயிஸ்ட்கள் முற்றுகையிட்டனர்.

இதனால் தலைநகர் காத்மாண்டுவிலிருந்தும் வெளியிலிருந்தும் வாகனப் போக்குவரத்து தடைப்பட்டது. (ஓ-6)

# ஸ்ரீ அம்மா பகவானின் நன்றி நவிலல் நாள்



இவ் உலகில் சுவர்ண யுகத்தை ஏற்படுத்துவதற்காக பூமி மீது அவதரித்த மனித அவதார கருணா மூர்த்திகளே ஸ்ரீஅம்மா பகவான். வருடந்தோறும் மார்ச் 7ஆம் திகதியை ஸ்ரீபகவானின் ஜென்ம தினமாகவும் ஆகஸ்ட் 15ஆம் திகதியை ஸ்ரீ பகவதி பத்மவதியம்மாவின் ஜென்ம தினமாகவும் யூன் 9ஆம் திகதியை ஸ்ரீ அம்மா பகவானின் திருக்கல்யாண உற்சவ தினமாகவும் உலகம் பூராகவும் பக்தர்களால் கொண்டாடப்பட்டு வருவது போல் நவம்பர் 14 ஆம் திகதியை நன்றித் திருநாளாகக் கொண்டாடுகின்றனர்.

மனிதர்களை பலதரப்பட்ட துன்பம் துயரங்களில் இருந்து விடுவித்து அவர்களினது சைதன்ய நிலையை உயர்த்தி ஆனந்தமாக வாழ வைப்பதே ஸ்ரீ அம்மா பகவானின் முதன்மையான நோக்கமாகும். எம் மதங்களைச் சேர்ந்தவர்களானாலும் அவ் அவ் மதத்தின் சத்தியத்தை ஸ்ரீ அம்மா பகவான் தங்களது அருளால் அனுபவப் பூர்வமாக உணர வைப்பார்கள்.

ஓம் சச்சிதானந்த பரப்பிரம்மா புருஷோத்தம பரமாத்மா ஸ்ரீ பகவதி சமேத ஸ்ரீ பகவதே நமஹ என்ற மூலமந்திரத்தை உச்சரிப்பதால் கோடிக்கணக்கான மக்களின் வாழ்வில் ஊகிக்க முடியாத அற்புதங்களும் அதிசயங்களும் நடந்தவண்ணமுள்ளன. ஸ்ரீ அம்மா பகவானின திருவுருவப் படமான ஸ்ரீ மூர்த்தியில் தெய்வீக சைதன்யம் நிறைந்துள்ளதால்றனர். இந்நிலையத்தில் ஸ்ரீ அம்மா பகவான் அருளால் பல அற்புதங்கள் நிகழ்ந்துள் என. இவற்றை இந் நிலையத்தினருடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.

மேலும் இவ்வாண்டு தமிழ் சிங்களப் புத்தாண்டு தினத்தன்று ஸ்ரீ அம்மா பகவான் ஸ்ரீ மூர்த்தியில் இருந்து நெய், அத்தர், குங்குமம், விபூதி, சந்தனம் போன்ற

## நவம்பர் 14 ஆம் திகதி ஸ்ரீ அம்மா பகவானின் நன்றித் திருநாளாகக் கொண்டாடப்படுகின்றது

அதனை வழிபட்டு பிரார்த்தனை செய்தால் நம் வேண்டுதல்கள் அனைத்தும் வெற்றியாகும். ஸ்ரீ அம்மா பகவான் அருள் அனுக்கிரகத்தின மூலம் பெற்றுக் கொண்ட நன்மைகளை இந்நாளில் நினைவு கூர்ந்து நன்றியின் நாளில் எம்மைப் படைத்த கடவுள் பெற்றெடுத்து பிறவியைக் கொடுத்த தாய், தந்தை, க்ணவர், மனைவி, உறவினர்கள், சினே கிதர்கள், ஆசிரியர்கள், பெரியோர்கள், முதி யோர்கள் எம்மை நாடுபவர்கள் மற்றும் உதவி புரிபவர்கள் அனைவருக்கும் எம் நிலையத்தில் உள்ள நன்றிகளை தெரிவித்த ஸ்ரீ அம்மா பகவானை மகிழ்ச்சியுறச் செய் வோமாக.

யாழ். மாவட்டத்தில் சுழிபுரம் கிராமத்தில் காளுவன் சந்திக்கு சமீபமாக ஸ்ரீ அம்மா பகவான் சர்ச்சங்க ஆன்மீகப் பிரார்த்தனை மையத்தில் வாராந்த சனிக்கிழமைகளில் பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை இடம்பெறும்.

கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வின் போது கலந்துகொள்ளும் பக்தர்கள் ஸ்ரீ அம்மா பகவானின் அனுக்கிரகத்தினால் பலதரப்பட்ட வேண்டுதல்களை நிறைவு செய்து வருகின்றனர்.

அனைத்து அபிசேகப்பொருட்களை அருளச் செய்து நாட்டில் அமைதி ஏற்பட வைத்துள்ளமை ஸ்ரீ அம்மா பகவானின் அனுக்கிரகமமே ஆகும்.

**எஸ்.கே.சிவலிங்கம் ஜி**
ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்

அனைத்து மக்களும் மத இன பாகுபாடற்ற முறையில் நாளை மறு தினம் சனிக்கிழமை ஸ்ரீ அம்மா பகவானின் நன்றி நவிலல் நாளை நினைவு கூர்ந்து நன்றியினைத் தெரிவித்து பிரார்த்தனை செய்து வழிபடுவோமாக.

## சைவ சமய அறிவுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை சைவ சமய விவகாரக் குழுவினால் நடாத்தப்படும் சைவ சமய அறிவுப் போட்டிக்கு விண்ணப்பித்த யாழ். கல்வி வலய பாடசாலைகளில் தரம் 4 தொடக்கம் தரம் 13 வரையான வகுப்புகளுக்கு நாளை மறுநாள் சனிக்கிழமை அன்று காலை 8.30 மணிக்கு போட்டிகள் ஆரம்பமாகவிருக்கின்றது.

இப்போட்டிக்கான வினாத்தாள்களை தங்கள் கோட்டக்கல்வி அலுவலகங்களில் பெற்று விடைத்தாள்களை மீண்டும் தங்கள் கோட்டங்களில் கையளிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ)

## 17ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்க தீர்மானம்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் 17ஆயிரம் பட்டதாரிகளை அரசசேவையில் இணைத்துக் கொள்ள தீர்மானித்துள்ளதாக தேசிய வருமான மற்றும் பிரதிநிதித்துறை அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் அரசதுறையில் உள்ள வெற்றிடங்களுக்கும் மற்றும் நுண்கலைப்பீட ஆசிரியர் வெற்றிடங்களுக்கும் இவர்களை நியமிக்கவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் ஜனவரிமாத ஆரம்பத்திலிருந்து இவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-4)

## நீலகிரி மாவட்டத்தில் நிலச்சரிவு ; பலி எண்ணிக்கை 40 ஆக உயர்வு

(ஊட்டி)



நீலகிரி மாவட்டத்தில், கனமழை பெய்து வருகிறது. இதனால் வெள்ளமும், கடும் நிலச்சரிவும்ஏற்பட்டு, பல வீடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. இன்னும் பல வீடுகள் தரைமட்டமாகின. வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டும், இடிபாடுகளில் சிக்கியும் ஒரே குடும்பங்களைச் சேர்ந்த பலர் பலியாகி விட்டனர். இதையடுத்து, நீலகிரியில் பலி எண்ணிக்கை 44 ஆக உயர்ந்துள்ளது.

நீலகிரியிலிருந்து கோவை செல்லும் முக்கிய பஸ் போக்குவரத்துத் தடங்களான குன்னூர் கோத்தகிரி சாலைகள் துண்டிக்கப் பட்டுள்ளதாலும், மழை தொடர்வதாலும் மீட்புப் பணிகளில் தொய்வு ஏற்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பெய்துவரும் கனமழையால், அனைத்து நீர்ப்பிடிப்பு பகுதிகளும் நிரம்பி, கடும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. மலைப்பகுதிகளில் பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. நிலச்சரிவில் 250 வீடுகள் தரைமட்டமாகி விட்டன. கடும் வெள்ளத்தில் பல வீடுகள் அடித்துச் செல்லப்பட்டன.

மாவட்டத்தின் பல இடங்களில் மரங்கள் சாய்ந்தும், மண் சரிவு ஏற்பட்டும் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. மரங்களை, தீயணைப்பு மற்றும் நெடுஞ்சாலைத் துறையினர் அகற்றி வருகின்றனர். பல இடங்களில் சாலையில் பெரும் பிளவு ஏற்பட்டுள்ளது. (6)




## வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்கு அதிக நிதி ஒதுக்கீடு

### அமைச்சர் சரத் அமுனுகம தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண அபிவிருத்தி நடவடிக்கைகளிற்கு நிதி ஒதுக்கீடு செய்யும் விசேட கொள்கைத் தீர்மானமொன்றை தமது அரசாங்கம் கொண்டுள்ளதாக உட்துறை அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் நடைபெற்ற உலக பொருளாதார சபை மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த மூன்று தசாப்த காலமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்தியோ வளர்ச்சியோ காணப்படாத நிலையிலேயே அதற்கான நிதி ஒதுக்கீடுகளை அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த காலங்களில் எவ்விதமான அபிவிருத்தி மற்றும் வளர்ச்சித் திட்டங்களும் அங்கு முன்னெடுக்கப்படவில்லை என அவர் தெரிவித்தார்.

இதனைக் கருத்திற் கொண்டே இந்த வருடத்தின் வரவு செலவுத் திட்டத்தில் இந்த மாகாணங்களின் அபிவிருத்திக்காக பாரிய தொகை நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பதின்மூன்றாவது திருத்தச் சட்ட அமுலாக்கலின் கீழ் தமிழ் மொழியும் அரச கரும மொழியாக மாற்றப்படும் என அவர் தெரிவித்துள்ளார். அத்துடன் ஆங்கிலம் ஒரு இணைப்பு மொழியாக மாற்றப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார் (6-14)

# க.பொ.த சாதாரண தரப் பரீட்சை-2009
# பயிற்சி வினாத்தாள் -கணிதம்

## பகுதி-I

திரு. செ.சுதர்சன் (ஆசிரியர் யாழ்ப்பாணக்கல்லூரி)

கவனிக்குக : எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை தருக. தேவையான இடத்தில் செய்கைகள் தெளிவாகக் காட்டப்படல் வேண்டும்

1. $(-2\ )^3$ இன் பெறுமானம் காண்க?

2. சுருக்குக:
   1.43 +14.3

3. $\sqrt{61/4}$ இன் பெறுமானம் காண்க?

4. காரணியாக்குக : $4\pi r^2 + 2\pi rh$

5. தீர்க்குக. $1\text{-}4(x+4_ = x$

6. 7 1/2 %ஐ தசமமாகத் தருக?


7. சுருக்குக : 1+2 lg 5 + 1g 4

8. $2x = 3\ h = 2\ f - g\ x$ எனும் சூத்திரத்தில் $x$ ஐ எழுவாயாக்குக.

9. சுருக்குக : $\frac{5x}{x-1} + \frac{5}{1-x}$

10. கணிக்குக : $\frac{2}{9} + (\frac{6}{7} \div \frac{3}{4})\ x\ 3\frac{1}{2}$


11. உருவில் உள்ள தரவுகளுக்கேற்ப $x$ இன் பெறுமானம் காண்க?





12. ஒரு திண்ம சதுரமுகியின் மொத்த மேற்பரப்பளவு 486 $cm^2$ ஆகும். அதன் ஒரு பக்க நீளத்தைக்காண்க?

13. சீரானகதியில் பயணம் செய்யும் புகையிரதமொன்று ஒரு சமிஞ்ஞை கம்பத்தைகடப்பதற்கு 5 செக்கன்களும் 60m நீளமானபுகையிரத மேடையைக் கடப்பதற்கு 9 செக்க்ன்களும் எடுத்தது எனின் புகைவண்டியின் நீளத்தைக் காண்க?

14. உருவின் பரப்பளவைக் காண்க்?




15. தரப்பட்ட வென்வரிபடத்தில் $A^1 \cap B^1$ ஐ வகைகுறிக்கும் பிரதேசத்தை நிழற்றுக?




16. ஒரு புத்தகத்தை ரூபா 630 இற்கு விற்பதன் மூலம் வியாபாரி 30% நட்டம் அடைந்தார். அவ்வியாபாரி புத்தகத்தை கொள்வனவு செய்த விலையைக்காண்க?

17. lg 2=0.3010 எனத்தரப்பட்டிருப்பின் 1g (1.25) இன் பெறுமானத்தை மடக்கை அட்டவணை உபயோகிக்காது காண்க?


18. $5x3y = a$ எனவும் $2x\text{-}10y = b$ எனவும் தரப்படின் $x,y$ இன் பெறுமானங்களை தனித்தனியே கணிக்காது $(x\text{-}y)$ இன் பெறுமானத்தை a,b சார்பில் பெறுக?

19. ஆரை 157.5 cm ஆகவுள்ள வட்டவடிவவளையமொன்று 15 சமபகுதிகளாக வெட்டப்பட்டு சிறு சிறு வளையங்கள் ஆக்கப்பட்டது. சிறுவலயங்களின் ஆரையை காண்க?


20. ஒரு மாணவன் ஏழு பாடங்களில் பெற்ற புள்ளிகள் 67, 49,77,63,58,69,61 ஆகும். அவன் 65 புள்ளிகளை சராசரியாகப் பெறுவதற்கு எட்டாவது பாடத்தில் எத்தனை புள்ளிகளைப் பெறவேண்டும்.

21. புள்ளிகள் (7,1),(0-1) ஊடு செல்லும் நேர்கோட்டின் சமன்பாட்டை எழுதுக?

22. உருவில் TA,TB என்பன வெளிப்புள்ளி T இலிருந்து வட்டத்திற்கு வரையப்பட்ட தொடலிகளாகும். xy இனால் குறிக்கப்படும் கோணங்களின் பருமன்களைக் கணிக்குக.





23. நிழற்றப்படாத பிரதேசத்தை வகைக் குறிக்கும் சமனிலிகளை எழுதுக?



24. முக்கோணி ஒன்றின் மூன்று பக்க நீளங்கள் $2a, a^2\text{-}1$ , $a^2+1$ ஆகும். இம் முக்கோணி ஓர் செங்கோண முக்கோணி எனக் காட்டுக?

25. குளத்தின் மேற்பரப்பில் காணப்படும் ஒருவகைப் பாசி, தினமும் இருமடங்காக அதிகரிக்கிறது. ஆரமபத்தில் $0.2m^2$ பகுதியில் பாசி காணப்பட்டது. இருபத்தியோராம் நாளில் குளத்தின் காலப்பகுதி பாசியால் நிரம்பிக காணப்பட்டது. குளத்தின் மேற்பரப்பு முழுவதும் நிரம்புவதற்கு எடுக்கும் காலம் யாது?

26. முக்கோணி ABC இல் பக்கங்கள் AB, BC இன் நடுப்புள்ளிகள் முறையே x, y ஆகும். AP = px உம், PQ//xy உம் ஆகும். PQ = 3.5 cm எனின் Ac இன் நீளத்தைக் காண்க?




27. A,B ஆகிய குழுக்களிலுள்ள அங்கத்தவர்களின் விகிதம் 2: 1 ஆகும் குழு A இலிருந்து குழு B இற்கு ஒரு அங்கத்தவர் இணைக்கப்பட்டால் தற்போது குழுகளிலுள்ள அங்கத்தவர்களின் விகிதம் 3:2. ஆகும். இரு குழுக்களிலும் உள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கை யாது?

28. a+b = 2 உம், ab= (-5) உம் எனின் $a3 + 3a^2\ b + 3a\ b^2 + b^3$ ,இன் பெறுமானம் காண்க?

29. ஒரு ஏணி n படிகளைக் கொண்டது படிகள் ஒவ்வொன்றும் 40cm இடைத்தூரத்தில் இருப்பதுடன் முதலாம் இறுதிப் படிகள் அந்தங்களிலிருந்து 40 cmதூரத்திலும் உள்ளது. ஏணியின் நீளம் ym எனின், y இற்கான கோவையை n சார்பில் பெறுக.

30. AB என்பது நேரிய பாதை ஆகும். P என்பது பாதையில் இருந்து 9m தொலைவில் உள்ள ஒரு கிணறு ஆகும். ஒழுக்குகள் பூற்றிய அறிவை பயன்படுத்தி பாதையிலிருந்து 6 m தூரத்திலும் கிணற்றிலிருந்து 4 m தொலைவிலும் உள்ள புள்ளிகள் இரண்டின் நிலைகளை பரும்படிப் படத்தில் குறித்துக்காட்டுக.

# இன்று ஒரு தகவல்

## நான்கு தர்மங்கள்

ஆன்மீகப் பேச்சாளர் ஒருவர் எனக்குச் சம்பந்தமில்லாத ஒரு கேள்வியை என்னிடம் கேட்டார்.

"தசரதனுக்கு ஏன் நான்கு பிள்ளைகள் பிறந்தார்கள்?" இதுதான் அவர் என்னைக் கேட்ட கேள்வி.

"எனக்கு என்ன தெரியும்... இது தசரதனிடம் நீங்கள் கேட்க வேண்டிய கேள்வி" என்று நான் பதிலளித்தேன்.

"தசரதன் கேட்டது ஒரு பிள்ளைதான்" என்றார் அவர்.

"அப்படியா" என்றேன்.

ஆமாம் ... தனக்கு பின்னால் நாட்டை ஆளவும் தான் நற்கதியடைய உதவவும் தசரதன் கேட்டது ஒரு பிள்ளை தான்.

அதேபோல் தேவர்களும் இராவணவதம் செய்வதற்கு ஒரு இராமனைத் தான் கேட்டார்கள்.

அப்படி இருக்கும் போது நான்கு பிள்ளைகள் எதற்கு? இதற்கு அந்த ஆன்மீகப் பேச்சாளர் கூறிய விளக்கம் இதுதான்:

இந்த உலகில் நான்கு வகையான தர்மங்கள் உள்ளன. அந்த நான்கு வகையான தர்மங்களையும் மக்கள் பின்பற்றி வாழ வேண்டும் என்பதைக் காட்டுவதற்காகத் தான் அந்த நான்கு சகோதரர்கள் தோன்றினார்களே தவிர இராவணனை வதம் செய்வதற்காக அல்ல.

அந்த நான்கு வகையான தர்மங்களும் எவை?

முதலில் வருவது சாமானிய தர்மம்.

அதாவது பிள்ளைகள் பெற்றோர்களிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? சீடன் குருவிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? மனைவி கணவனிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? இவை போன்ற அனைத்தும் 'சாமானிய தர்மங்கள்' எனப்படும். இந்தச் சாமானிய தர்மங்களை கடைப்பிடித்து வாழ்ந்து காட்டியவர் ஸ்ரீராமர்.

சாமானிய தர்மங்களை ஒருவன் ஒழுங்காகச் செய்து கொண்டு வந்தால் கடைசியில் ஒருநிலை வருமாம். அந்த நிலையில் இறைவன் திருவடி ஒன்றே நிரந்தரம். மற்ற எதுவும் நிலையல்ல என்ற எண்ணம் வருமாம்.

அதனால் தான் குலசேகர ஆழ்வார் "இந்திரலோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண்டேன்" என்று கூறினார்.

'கிருஷ்ண லீலா தரங்கனி' என்ற நூலின் ஆசிரியர் "கிருஷ்ணா! தாமரை போன்ற உன் பாதங்களைச் சுற்றி நான் தேன் வண்டு போல வந்து கொண்டிருக்க வேண்டும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இத்தகைய தர்மத்திற்கு 'சேஷ தர்மம்' என்று பெயர். இந்த சேஷ தர்மத்தைப் பின்பற்றி வாழ்ந்து காட்டியவன் இலட்சுமணன்.

மூன்றாவது தர்மத்திற்கு விசேஷ தர்மம் என்று பெயர். அதாவது தூரத்தில் இருந்தவாறு . இறைவன் நினைவாக இருப்பது 'விசேஷ தர்மம்' ஆகும்.

சேஷ தர்மத்தை விட விசேஷ தர்மத்தைப் பின்பற்றுவது கடினம்.

இறைவனுக்கு அருகிலேயே இருந்து கொண்டு இறைவன்நினைவாகவேஇருப்பது கஷ்டமல்ல. ஆனால் தூரத்தில் இருந்து கொண்டு இறைவன் நினைவாகவே வாழ்வது என்பது கடினமான காரியம். அதைச் செய்து காட்டியவன் பரதன்.

நான்காவது தர்மம் 'விசேஷ தர தர்மம்' எனப்படும்.

இறைவனை விட அவனுடைய அடியார்களுக்குத் தொண்டு செய்வது விசேஷ தர தர்மம் ஆகும். இதைக் கடைப்பிடித்துக் காட்டியவன் சத்துருக்கன். அதனால் தான் சத்துருக்கன் பரதனுக்கு விடாமல் தொண்டுகள் செய்தான்.

இப்படி நான்கு வகையான தர்மங்களையும் கடைப்பிடித்து மக்களுக்குக் காட்டுவதற்காகத் தான் இறைவன் நான்கு பேராக அவதரித்தான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# ஐ.நா.விலிருந்து 125 கோடி ரூபா பெறுமதியான 5கண்ணிவெடி அகற்றும் இயந்திரங்கள் கொள்வனவு

(கொழும்பு)

அகதிகளுக்கான ஐ.நா.வின் உயர்ஸ் தானிகராலயத்திலிருந்து கண்ணி வெடி களை அகற்றும் 5 இயந்திரங்களை அரசாங்கம் கொள்வனவு செய்துள்ளது. தலா 5 தொன் நிறைகொண்ட இந்த 5 இயந்திரங்களும் 125 கோடி ரூபா வென மதிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கில் கண்ணி வெடிகள் அகற்றும் பணிகளை துரிதப்படுத்துவதற்காக ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், வடக்கு செயலணியின் தலைவருமான பஷில் ராஜபக்ஷ எம்.பியின் வேண்டுகோளின் பிர காரமே கண்ணிவெடி அகற்றும் இயந்திரங்கள் கொள்வனவு செய் யப்பட்டுள்ளன.

இந்த கண்ணி வெடி அகற்றும் இயந்திரங்கள் ஒரு மணித்தியாலயத்திற்கு சுமார் 2 ஆயிரத்து 200 சதுர மீற்றர் பரப்பளவில் கண்ணி வெடிகளை அகற்றும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் ஒரு வேலைத்திட்டமான மீள் குடியேற்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் அதனை துரிதப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மீள் குடியேற்றத்தை துரிதப்படுத்த முடியாமைக்கு பிரதான காரணமாக அமைந்துள்ள கண்ணி வெடிகளை துரிதமாக அகற்றினால் மீள் குடியேற்ற நடவடிக்கைகளை மேலும் துரிதப்படுத்தலாம். அதன் அடிப்படையிலேயே முதல் கட்டமாக 5 கண்ணி வெடி அகற்றும் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

வடக்கில் கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களில் புதைக்கப்பட்டுள்ள இலட்சக்கணக்கான கண்ணிவெடிகள், பொறி வெடிகளை அகற்றுவதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ள நிலையிலேயே கண்ணி வெடி அகற்றும் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. (ஓ-6)

# அரசாங்கத்திடம் சரணடைந்துள்ள புலி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வளிக்க 20 மத்திய நிலையங்கள் நிறுவ நடவடிக்கை

## நீதி மற்றும் மறுசீரமைப்பு அமைச்சு தகவல்

(கொழும்பு)

அரசாங்கத்திடம் சரணடைந்துள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினர் களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கென 20 மத் திய நிலையங்களை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நீதிமற்றும் மறு சீர மைப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

வவுனியாவில் உள்ள அகதி முகாம்களுக்கு அண்மையில் விஜயம் செய்த நீதி மற்றும் மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட தலைமையிலான குழுவினர் அங்கு நிலைமைகளை ஆராய்ந்ததுடன் படையினரிடம் சரணடைந்துள்ள புனர்வாழ் வளிக்கப்படும் புலிகளின் உறுப்பினர்கள் தொடர்பிலும் ஆராய்ந்துள்ளனர்.

விடுதலைப்புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் இறுதிக்கட்ட யுத்தம் நடை பெற்றுக் கொண்டிருந்த வேளையிலும் அதற்குப் பின்னரும் அரசாங்கத்திடம் சுமார் 11ஆயிரம் புலிகள் சரணடைந்துள்ளனர். இவர்களில் 1800 பேர் பெண்களாவர். இவர்களுக்கு புனர் வாழ்வளிக்கும் நடவடிக்கைகள் அரசாங்கத்தினால் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

சரணடைந்த புலி உறுப்பினர்கள் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் தொழில் பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகின்றன.

அவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கென தற்போது 14 மத்திய நிலையங்கள் செயற் பட்டு வருவதுடன் மேலும் 20 மத்திய நிலையங்களை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

நீதி மற்றும் மறுசீரமைப்பு மிலிந்த மொறகொட அங்கு விஜ யத்தை மேற்கொண்டதன் பின்னர் மேலும் 20 மத்திய நிலையங்களை நிறுவுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சின் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன் பிரகாரம் மத்திய நிலையங்களை நிறுவுவதற்கு ஆரம் பிக்கப்பட்ட நடவடிக்கை அடுத்த மாதத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-4)

# இராசி பலன்

12.11.2009
(ஐப்பசி 26 வியாழக்கிழமை)
தசமி காலை 6.26 மணிவரை
ஏகாதசி பின்னிரவு 4.36 மணிவரை
பூரம் முற்பகல் 8.21 மணிவரை
இராகுகாலம் 1.36-3.06 மணிவரை
சுபநேரம் 7.36-9.06 மணிவரை
ஏகாதசிவிரதம்

| | |
|---|---|
| மேடம் | காரிய நன்மை, தொழில் முன்னேற்றம், ஆரோக்கியமான நிலை, விருந்துபசாரம். |
| இடபம் | வியாபார விருத்தி, புத்திரரால் கவலை, சிறுவியாதி, தாழ்ந்த சுபாவம். |
| மிதுனம் | கல்வியில் ஆர்வம், சுபசெலவு, மாதாசுகம், சுபநிகழ்வு. |
| கடகம் | வாக்கு மேன்மை, காரிய சித்தி, பொருள் சேர்க்கை, அன்னியர் சந்திப்பு. |
| சிங்கம் | பெரியோர் உதவி, கடினவார்த்தை, முயற்சி தாமதம், தன விரயம். |
| கன்னி | தெய்வ சிந்தை, போசன சுகம், நண்பர்கள் சந்திப்பு, தேகநலன். |
| துலாம் | உஸ்ண வியாதி, காரிய அலைச்சல், தனவிரயம், சயன சுகக் குறைவு. |
| விருச்சிகம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, உறவினர் வருகை, உடல் நலம். |
| தனுசு | இனிய சம்பவம், தொழில் முன்னேற்றம், காரிய அனுகூலம், போசன சுகம். |
| மகரம் | புதிய முயற்சி, திடீர்பயணம், எதிர்பாராத செலவு, தந்தை வழி உறவு. |
| கும்பம் | கௌரவக் குறைவு, போசன சுகம், முயற்சி தாமதம், பிறருக்கு உதவுதல். |
| மீனம் | குடும்ப நன்மை, பிரயாண சுகம், நல்ல செய்தி, முயற்சி கைகூடும். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் 1 Kg | திருநெல்வேலி ரூபா | யாழ்ப்பாணம் ரூபா | சாவகச்சேரி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 70 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 110 | 120 | 110 |
| பச்சைமிளகாய் | 50 | 70 | 60 |
| தக்காளி | 60 | 70 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 40 | 45 |
| கோவா | 30 | 50 | 45 |
| கரட் | 70 | 80 | 70 |
| பூசணி | 10 | 25 | 25 |
| புடோல் | 30 | 40 | 40 |
| வாழைக்காய் | 30 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 70 | 70 | 70 |
| பெரிய வெங்காயம் | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 70 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 20 | 30 | 40 |
| கரணைக் கிழங்கு | 30 | 30 | 40 |
| பயிற்றங்காய் | 80 | 100 | 75 |
| லீக்ஸ் | 120 | 140 | 120 |
| பீற்றூட் | 40 | 50 | 40 |
| கறிமிளகாய் | 70 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 90 | 120 | 130 |
| கீரை - 1 பிடி | 30 | 35 | 20 |
| தேசிக்காய் | 200 | 240 | 240 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 35 |

# பிறந்த எண் பலன்களும் அதிர்ஷ்ட பெயர்களும்

## உடல் எண் : 1 விதி எண் : 1

### உடலமைப்பு

பிறந்த எண்ணும், விதி எண்ணும் 1 ஆக இருக்குமானால் அவர்கள் சூரியனின் ஆதிக்கத்திற்கு உட்பட்டவர்கள் ஆவர். அவர்கள் சிவந்த உடலுடன் உயரமானவர்களாகவும், கவர்ச்சியாகவும் தோற்றமளிப்பர். அவர்கள் கண்கள் கூட சிவந்தே இருக்கும். உஷ்ண தேகம் கொண்டவர்கள்.

### மன, குணவியல்பு

இவர்கள் இலட்சியவாதிகளாக இருப்பர். நீதி நேர்மைக்குக் கட்டுப்பட்டவர்களாகவும் அநியாயத்தைத் துணிந்து எதிர்க்க வல்லவர்களாகவும் இருப்பர். சுய கௌரவம் மிக்கவர்கள். தம் கௌரவத்திற்கு இழுக்குத் தரும் எந்த ஒரு செயலையும் செய்யமாட்டார்கள்.

இவர்களிடம் நம்பிக்கை, நாணயம் மிகுந்திருக்கும். பிறரை எந்தச் சமயத்திலும் ஏமாற்ற மாட்டார்கள். சுதந்திரப் பிரியர் எதையும் தன்னிச்சையாகவே செய்ய வல்லவர்.

இவர்கள் எப்போதும் சோம்பலாக இருக்க மாட்டார்கள், எதையாவது ஒன்றைப் பற்றிச் சிந்தித்த வண்ணம் இருப்பர். தயவு தாட்சண்யம் தாராள குணம் இருக்கும். தன்னிடம் அடைக்கலம் புகுந்தவருக்கு தாராளமாக உதவும் நல்ல குணம் உடையவர்.

இருப்பினும் தற்புகழ்ச்சி மிக்கவர்கள். பிறர் விவகாரங்களில் காரணமின்றித் தலையிட்டு பிரச்சினைகளைத் தோற்றுவிப்பர்.

அனைவரிடமும் அன்புடனும் பாசத்துடனும் நடந்து கொண்டாலும் தன்னை மதிக்காதவர்களை உதாசீனம் செய்யவும் தயங்க மாட்டார்கள்.

### குடும்ப வாழ்க்கை

இவர்களுக்கு காதல் வெற்றி தரும்

இவர்களுக்கு மனம் விரும்பியபடி திருமணம் நடக்கும். இவருடைய வாழ்க்கைத் துணை நல்லவராகவும் இவரை மேன்மைப் படுத்துபவராகவும் இருப்பர். உற்றார் உறவினரிடமும் பாசத்துடனும், மிகுந்த அனுசரணையுடனும் நடந்து கொள்வர். ஆனால் இவர்கள் குடும்பத்தாரிடம் மிகவும் கண்டிப்புடன் நடந்து கொள்வர். அதனால் பிறரின் வெறுப்புக்கு ஆளாகக் கூடும்.

### தொழிலும் வருமானமும்

சூரியனின் ஆதிக்கம் முழுவதும் உள்ளதால் இவர்கள் நெருப்பு, மின்சாரம் சம்பந்தப்பட்ட தொழில்களில் சிறப்புடையவர். அத்துடன் இவர்களிடம் நிர்வகிக்கும் திறமை இயல்பாகவே இருக்கும்.

அதனால் இவர்கள் ஒரு சங்கத் தலைவராகவோ, மத குருவாகவோ, ஆன்மீகத் துறையில் அறங்காவலராகவோ இருந்து சிறப்படைவர். இரும்பு, இயந்திர சம்பந்தப்பட்ட நிலக்கரி, அனல் மின்சாரம் போன்ற துறைத் தொழில்களும், இவர்களுக்கு ஏற்றதாக இருக்கும். இரும்பு ஆயுதங்கள் செய்தல், ஆபரணங்கள் செய்தல் போன்றனவும் ஏற்றவையே.

அரசியல் ஈடுபாடு நன்மை தர வல்லதாக இருக்கும். ஒரு பகுதிக்குத் தலைவராகவோ சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வகிக்கவோ கூடும். இவர்கள் கலையார்வம் மிக்கவர்களாகவும் இருப்பர்.

இவர்களின் பெயர் எண் சாதகமாக இருந்து விட்டால் அதே சூரிய ஆதிக்கமுள்ள பெயர் எண்ணாகவும் இருந்துவிட்டால் இவர்கள் நாட்டை ஆளும் உயர் பதவி வகிக்கக் கூடும்.

இவர்கள் நேர்மையற்ற எந்த வழியிலும் செல்ல மாட்டார்கள். தம் உழைப்பினால் ஊதியம் பெற்று அதனால் உயர்வடைவர். இவர்கள் அரசியலில் ஈடுபாடு கொண்டும் உயர்வடைவர். அதிர்ஷ்டப் பெயர் எண்ணாக அமைந்திருக்குமாயின் மிக உயர்ந்த நிலையில் வாழ்க்கைத்தரம் இருக்கும். வண்டி வாகன யோகம் உண்டு. ஆரம்பத்தைவிடப் பிற்காலம் முன்னேற்றமாக இருக்கும். பிறர் மதிக்க வாழ்பவராக இருப்பர்.

### ஆரோக்கிய நிலை

இவர்கள் கம்பீரத் தோற்றமுள்ளவராக இருந்தாலும் உடல் அதிக உஷ்ணம் உள்ளவராக இருப்பர். இவர்களுக்கு உஷ்ண சம்பந்தப்பட்ட வியாதிகள், காய்ச்சல், இரத்தக் கொதிப்பு, மூலம் கட்டி போன்ற நோய்களுக்கு ஆளாகக்கூடும்.

கண் பார்வை சம்பந்தப்பட்ட கோளாறுகளும், கண் நோயும் ஏற்படும். அத்துடன் இவர்களுக்கு இருதயம் மற்றும் வாத நோய்கள் ஏற்பட வாய்ப்புண்டு. இவர்களுக்கு எந்த நோய் வந்தாலும் விரைவில் குணமடைவது கடினம். நீண்ட காலம் தொல்லை கொடுக்கும்.

### சாதக பாதக எண்களும், திகதியும்

இவர்கள் சூரியன், சுக்கிரன் ஆதிக்கத்திற்குட்பட்ட 16, ஆதார எண் வரக்கூடிய விஸ்தார எண்களில் யோகமான பலனளிக்கும் ஒன்றில் பெயர் அமைத்துக் கொள்வது சிறப்பாகும்.

தம் நிறுவனங்களுக்கும் 1,6 தொடர்புடைய யோகப் பலன் தரவல்ல விஸ்தார எண்களில் பெயர் அமைக்க அதிர்ஷ்டமாகும்.

இவர்களுக்கு 1,6 தான் யோகமளிக்கவல்ல எண்கள். 1,6 ஆகியவற்றுடன் 4 என்ற எண்ணும் அது தொடர்புடைய திகதிகளும் நற்பலன்கள் நடக்கக் கூடியவையாக இருக்கும்.

இவர்களுக்கு சனியின் ஆதிக்கம் பெற்ற 8 மற்றும் அது தொடர்புடைய எண்களும் திகதியும் பாதகமானவை.

## உடல் எண் : 1 விதி எண் : 2

### உடலமைப்பு

பிறந்த எண் 1 ஆகவும், விதி எண் 2 ஆகவும் பிறந்தவர்கள் சூரியன், சந்திரன் இருவரின் ஆதிக்கத்திற்குட்பட்டவர்கள். இவர்கள் உயரம் குறைந்தவர்களாக காணப்பட்டாலும் அழகும் கவர்ச்சியும் மிக்கவர்களாக இருப்பர். உடல் வலிமை கொண்டவர்கள். ஆனால் மனபலம் இருப்பது கடினம்.

### மன, குணவியல்பு

பிறருக்கு அடங்கி நடக்கும் சுபாவம் உள்ளவர். தற்புகழ்ச்சிக்கு ஆளானவராக இருப்பர். தன் சுய வேலையை விடப் பிறர் வேலைகளைப் பொறுப்புடன் செய்வர். பெரும்பாலும் சலனத்திற்குள்ளாவதாக இருக்கும். இவர்கள் மனம் காரணமின்றி எதைப் பற்றியாவது நினைத்து குழப்பமும், அதனால் வேதனையும் படக் கூடியவர்கள்.

பிறர் மனம் கவரும்படி நயமுடன் பேசக் கூடியவர். இவர்கள் தம்மை எல்லாம் தெரிந்த கெட்டிக்காரர் என்று நினைத்திருப்பர். ஆனால் சில நேரங்களில் பிறரின் ஏமாற்றுதலுக்கு ஆளாக நேரும். இருந்தாலும் அதை வெளியில் காட்டிக் கொள்ள மாட்டார்கள். இவர்களுக்கு எப்போதும் பெண்கள் விரோதிகளாகவே இருப்பர். அவர்களால் அடிக்கடி தொல்லைகளுக்கு ஆளாக நேரும்.

### குடும்ப வாழ்க்கை

இவர்கள் பெற்றோரின் அரவணைப்பில் வளர்ந்தவர்களாக இருக்க மாட்டார்கள். அவர்களை இழக்கவும் நேரலாம். அதனால் பல கவலைகளை ஏற்று வளர்ந்திருப்பர். இவர்களுக்கு வாய்க்கும் வாழ்க்கைத் துணையும் இவர்களுக்குப் பொருந்தாதவராக ஏட்டிக்குப் போட்டியாக அமைவர். வாழ்க்கையில் எப்போதும் ஏதாவதொரு தீர்க்க முடியாத பிரச்சினையும் அதனால் வேதனையுற்றிருக்கவும் நேரும். பூரண நிம்மதியுடன் வாழ்வது கடினம்.

### தொழிலும் வருமானமும்

இவர்கள் எந்த உத்தியோகம் அல்லது தொழில் புரிபவராக இருந்தாலும் அதிலும் மனம் பொருந்தியிருக்க மாட்டார்கள். அரசாங்கம் மற்றும் நிறுவனங்களில் பணிபுரிபவராக இருப்பர். அப்படியிருப்பினும் சக ஊழியர்களுடன் போராட வேண்டிய நிலை ஏற்படும்.

சொந்தத் தொழில்கூட இவ்வாறே குழப்ப நிலை நிலவும். பொருளாதாரத் துறையில் ஏற் றமும் இறக்கமும் இருந்த வண்ணமிருக்கும்.

பொதுவாக இவர்களில் பெரும்பாலோர் உத்தியோகம் புரிபவர்களாகவே இருப்பர். ஓர் ஊரிலிருந்து பிற ஊர்களுக்குப் பொருட்களைத் தருவிக்கும். தொழில் புரிவர். ஏற்றுமதி, இறக்குமதி தொழிலில் சிறப்புறுவர்.

அந்தத் தொழில் நெருப்பு மற்றும் மின்சாரத் தொடர்பானவையாக இருக்கும். அல்லது ஆடம்பரப் பொருள்களாக பெண் கள் விரும்பும் அழகு சாதனப் பொருட்களாக இருக்கக்கூடும். வெளிநாடுகளுடன் தொடர்பு கொண்டு வியாபாரம் புரிபவராகவும் இருப்பர்.

பெரும் அளவு இலாபம் கிடைக்கும். பொருளாதாரத் துறையில் இவர்கள் மேன்மையுறுவர்.

### ஆரோக்கிய நிலை

இவர்கள் உடலுறவில் அதிகமாக இன்பம் காண்பர். அதனால் அது தொடர்பான நோய்களுக்கு ஆளாக நேரும். அதைத் தவிர நரம்பு சம்பந்த நோய், தலைவலி, பல்வலி போன்றவையும், மூட்டு வலி போன்ற நோய்களும் ஏற்படக்கூடும்.

### சாதக பாதக எண்களும் திகதிகளும்

இவர்களுக்கு சுக்கிரன் ஆதிக்கம் பெற்ற தொடர்பிலான ஆதார எண் வரக்கூடிய விஸ்தார எண்களில் தம் பெயரை மாற்றி அமைத்துக் கொண்டால் யோகமாக இருக்கும். அதைத் தவிர கேதுவுக்குரிய 7 வரக்கூடிய எண்ணிலும் யோகமாக எண்ணுக்குப் பெயர் வருமானால் மாற்றிக் கொள்ளலாம்.

தம் நிறுவனங்களுக்கும் 6 தொடர்புடைய யோகமான பலன் தரும் எண்களுக்குப் பெயர் அமைப்பது சிறந்தது.

இந்த வகையில் 6,7 ஆகிய இரண்டுமே இவர்களுக்கு யோகமான எண்கள். திகதிகளில் சூரியன், சுக்கிரன், கேது ஆதிக்கத்திற்குட்பட்ட 1,6,7 ஆகியவை ஆதார எண்ணாக வருபவையாகும்.

ஆனால் சனி, செவ்வாய் ஆதிக்கத்திற்குட்பட்ட 8,9 தொடர்பான எண்களும், திகதிகளும் சோதனை மிகுந்தவை. தவிர்ப்பது நல்லது. (தொடரும்)

# கடந்த மூன்று வருடங்களில் கொலை, கடத்தல் மற்றும் காணாமல் போதல் குறித்து 15 ஆயிரம் முறைப்பாடுகள் பதிவு

## விசேட ஆணைக்குழு தகவல்

(கொழும்பு)

கடந்த 3 ஆண்டு காலப்பகுதியில் கொலை கடத்தல் மற்றும் காணாமல் போதல் சம்பவங்கள் தொடர்பில் சுமார் 15ஆயிரம் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக விசேட ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

படுகொலைச் சம்பவங்கள், கடத்தல்கள், அடையாளம் காணப்படாத சடலங்கள், இனந்தெரியாத படுகொலைகள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக மூவர் அடங்கிய விசேட ஆணைக்குழுவின் தலைவர் மஹானாம திலகரட்ண தெரிவித்துள்ளார்.

நாட்டில் மொத்தமாக 410 பொலிஸ் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளதாகவும் இவற்றுக்கு நாள்தோறும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் குற்றச்செயல்கள் தொடர்பில் பொலிஸாரின் செயற்பாடுகள் திருப்தி அளிக்கும் வகையில் அமையப் பெறவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


சில குற்றச் செயல்கள் தொடர்பில் பொலிஸார் அசமந்தப் போக்கினை பின்பற்றுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

சரியானமுறையில் விசாரணைகளை நடத்தி நீதியை நிலைநாட்டுவதற்கு பொலிஸார் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ஓ-6)

# தகவல்களை அறிந்து கொள்வதற்கான பூரண உரிமை மக்களுக்கு உண்டு

## பிரதம நீதியரசர்



(கொழும்பு)

தகவல்களை அறிந்து கொள்வதற்கான பூரண உரிமை மக்களுக்கு காணப்படுவதாக பிரதம நீதியரசர் அசோக டி சில்வா தெரிவித்துள்ளார்.

அமைச்சர்களிடம் மக்கள் கேள்வி கேட்க முடியுமென அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

நீதியமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள ஜஸ்டிஸ் என்ற சஞ்சிகையின் வெளியீட்டு வைபவத்தில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஹுல்ஸ்ரப் பிளேசில் உள்ள உச்ச நீதி மன்றக் கட்டடத்தில் இந்த விழா நடைபெற்றது.

அரசாங்கத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் வெளிப்படையான தன்மை காணப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர்கள் தாங்களது நடவடிக்கைகள் தொடர்பில் மக்களுக்கு பதில் கூற வேண்டியவர்கள் என்பதனை அனைவரும் நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

தகவல்களை அறிந்து கொள்ளும் நிலைமை உறுதிப்படுத்தப்பட்டால் வெளிப்படைத் தன்மை குறித்த விசாரணைகளை தடுக்க முடியுமெனவும் தகவல்களை அறிந்து கொள்ளும் மக்களின் உரிமையை உறுதிப்படுத்துவது குறித்து ஏற்கனவே முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியில் முடிபடைந்ததாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ஓ-6)

நல்ல செய்தி கொண்டு வருபவனே துணிவோடு கதவைத்தட்டுவான்.

~ அப்துற்-றஹீம்

வலம்புரி

## தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்று சேர வேண்டிய நேரம்

என் அன்பிற்குரிய தமிழ் ஊடகவியலாளர்களுக்கு, அநேக வணக்கம். உங்கள் அனைவருக்கும் கடிதம் எழுத வேண்டும் என நீண்டகால ஆசை. அது நிறைவேறுவதில் ஆனந்தம்.

அதேநேரம் பல துன்பங்கள் எம்மனங்களை குடைந்து கொண்டிருப்பதை மறந்தும் மறுத்தும் விடமுடியாது.

விரும்பியோ விரும்பாமலோ ஊடகவியலாளர்கள் என்ற பதங்கள் எங்களைச்சுற்றியுள்ளன. நாங்கள் சுற்றினோமா? அல்லது அது எம்மை சுற்றியதா? என்ற கேள்விகளுக்கெல்லாம் எங்கள் மனச் சாட்சிகளைவிட வேறு எதுவுமே பதிலாக அமையாது.

எதுவாயினும் இக் கடிதத்தை எழுதுபவன் ஊட கவியலாளன் என்ற பதத்தை ஒரு போதும் பயன்படுத்தியதில்லை.

நெரிசல்களான இடங்களிலும் அந்த கொள்கையிலிருந்து விலக்குப் பெற்றதும் இல்லை. ஊடகவியலாளன் என்பதற்காக 'முன்னுரிமை' கேட்பது முறையற்றது என்பதில் நூறு வீத உடன்பாடு உண்டு.

யுத்தகாலத்தில் மிகச் சுலபமாகப் பெறக்கூடிய பதவியாக இருந்தவற்றில் 'ஊடகவியலாளர்' என்பதும் ஒன்று.

எனவே நான் 'ஊடகவியலாளன்' என மார்தட்டு வது மடமைத்தனம். மற்றவர்கள் ஆபத்தானதெனக் கருதியதை நாம் அள்ளித் தலையில் கொட்டிக் கொண்டோம்.

ஏதோ ஊடகவியலாளர்களுக்கான தண்டனைகள் கால அசைவில் விலக்குத் தந்துள்ளன. இதற்காக ஊடகத்தின் பெயரால் உயிர் வாழ்வு மறுக்கப்பட்டவர்களை நாம் மறந்துவிட முடியாது.

அதேநேரம் தண்டனைகள் தான் ஊடக வியலாளர்களை ஒழுங்குப்படுத்தும் என்ற தேற்றமும் முற்றாக அழிக்கப்பட வேண்டும்.

ஊடகப் பணி புனிதமானது. அந்தப் புனிதத்திற்குள் மண்ணையும் தூவலாம். மலரையும் தூவலாம். அது அவரவர் மனத்தின் அளவை பொறுத்தது.

ஆனால் எங்களால் ஏதேனும் நல்லது நடக்குமாயின் அதனை இன்றே செய்வோம்.

என் அன்பிற்குரிய தமிழ் ஊடகவியலாளர்களே! தமிழ் மக்கள் சொல்லெணாத் துன்பத்தை அனுபவித்து விட்டனர்.

அதிலும் வன்னிமக்கள் பட்ட பாட்டை 'துன்பம்' என்று கூறுவது போதுமானதல்ல.

அவர்களுக்கு நேர்ந்த அவலத்திற்கான பாவத்தை பங்கிட்டால் அரசியல், படை, ஊடகம் என்ற ஆகிய முப்பிரிவும் தொண்ணூறு வீதத்தை தமதாக்கிக் கொள்ளும்.

எனவே இழப்புகளின் பாவத்திற்குப் பரிகாரம் தேடவேண்டும். அது வருகின்ற தேர்தலில் தமிழ் மக்களுக்கு சரியானதை எடுத்துக் கூறுவதாக இருக்கட்டும்.

இதற்காக தமிழ் ஊடகங்கள் ஓரணியில் திரண்டு கூடி ஆய்ந்து எடுத்த முடிபை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

தேர்தல் தரும் முடிவுகளில் பத்திரிகைகளின் வகிபங்கு காத்திரமானவை.

ஆகவே இனப்பற்றோடு-வியாபார நோக்கங்களை தூக்கியெறிந்துவிட்டு ஒன்றிணைவோம் வாரீர்.

என் இனிய யாழ்ப்பாணத்து ஊடகங்களே ஒன்று சேர்ந்து தேர்தல் பற்றி சிந்தியுங்கள் உங்கள் சிந்தனை எங்கள் இனத்தின் ரணங்களுக்கு மூலிகைச்சாறாக இருக்கட்டும்.

# குருநகர் கடற்றொழிலாளர்கள் பிரச்சினைக்கு சுமூகத் தீர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் மேற்குக் கரையோரப் பகுதி கடற் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளுக் குத் தீர்வுகாணும் வகையில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தலை மையில் குருநகர் கடற்தொழிலாளர் அபிவிருத்திச் சங்கத்தில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

இழுவைப்படகு கடற்தொழிலாளர்கள் மற்றும் சிறு படகுகளில் தொழிலில் ஈடுபடும் கடற்தொழிலாளர்களுக்கிடையே தத்தமது தொழில்களைத் தொடர்வதில் கடந்த இரு மாதகாலமாக நிலவி வந்த இழுபறிக்கு தீர்வு காணக்கூடிய சுமூகமான சூழ்நிலையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏற்படுத்தியுள்ள நிலையில் நேற்று முன்தினம் மாலை குருநகர் கடற்தொழிலாளர் சங்கம் இச்சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தது.

இச்சந்திப்பில் கடற்தொழிலை எதிர்காலத்தில் திறம்பட முன்னெடுத்துச் செல்வதற்கு தேவையான முன்னேற்பாடுகள் ஒழுங்குகள் தொடர்பாக அமைச்சரிடம் கடற்தொழிலாளர் சங்கத்தின் பிரதிநிதிகள் தமது ஆலோசனைகளை முன்வைத்தனர்.

அவற்றில் தற்போது நடைமுறையில் இருக்கும் அதிகாலை 4 மணிக்கு தொழிலுக்குச் செல்வதற்கான நேரத்தை அதிகாலை 3 மணிக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல், ஒரு நாள் கடலில் தங்கிநின்று தொழில் செய்வதற்கான 28 அடி நீளப்படகினை தயாரித்தல், கடற்கரையில் மக்களின் பாவனைக்கு அனுமதிக்காத வீடுகளை குடியிருப்பதற்காக அனுமதித்தல் போன்ற 11 கோரிக்கைகள் அடங்குகின்றன.

குருநகர் கடற்தொழிலாளர் சங்கத்தின் கோரிக்கைகளை பரிசீலித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதாகவும் அவற்றை நிறைவேற்றுவதற்கு கடற்தொழிலாளர்கள் அனைவரும் தமக்கு பக்கபலமாக இருக்கவேண்டுமென்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இக்கலந்துரையாடலின் போது கேட்டுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட வீதிகள் மதகுகள் திருத்தும் பணி ஆரம்பம்

## யாழ். மாநகர முதல்வர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வீதிகள், மதகுகள் திருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தகவல் தருகையில்,

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வீதிகள்,மதகுகள் திருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதில் யூனோப்ஸ் தொண்டு நிறுவனத்தின் நிதியுதவியுடன் துண்டிச்சந்தியிலிருந்து யாழ். கடற்கரை வீதி வரையான மாநகர சபை வீதிகள், 8 மதகுகள் என்பன திருத்தப்படுவதுடன் மேலும் 10 மதகுகள் புதிதாக அமைக்கப்படவுள்ளது.

யாழ்.மாநகர சபைக்கு உட்படாமல் வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தி திணைக்களம் ஆகியவற்றிற் குட்பட்ட வீதிகள் யாழ்.மாநகரசபை எல்லைக்குள் இருக்கின்றன. எனினும் பொதுமக்கள் வேறு திணைக்களத்திற்குரிய பிரதான வீதிகள் திருத்தப்படவில்லை என யாழ்.மாநகரசபையில் முறைப்பாடு செய்கின்றனர்.

எனவே யாழ்.மாநகரசபைக்குட்பட்ட சி தரத்திலான வீதி களை மாத்திரமே எம்மால் புனரமைப்புச் செய்ய முடியு மென்பதைகுறிப்பிட்டுக்கொள்கின்றேன் என யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா குறிப்பிட்டார்.

**பாசையூரில் உள்ள சந்தை, வீதிகளை திருத்தும் பணி நடைபெறுகிறது**

இதேவேளை பாசையூர் வீதிகள்,சந்தை என்பன துரித கதியில் திருத்தப்பட்டு வருவதாக யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார். இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது,

பாசையூர் சந்தை நீண்டகாலமாக திருத்தப்படாமையால் தாம் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக பாசையூர் புனித அந்தோனியார் கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கம் கோரிக்கை விடுத்தது. இக் கோரிக்கையை ஏற்று உடனடியாக பாசையூர் சந்தையின் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இதன் பிரகாரம் பாசையூர் சந்தை யின் கூரை வேலைகள் திருத்தும் பணிகள் கடந்தவாரம் ஆரம்பமானது. அத்துடன் பாசையூர் பகுதியின் நீண்டகாலமாக பயன் படுத்தப்படாம லிருந்த வீதிகள் யாழ்.மாநகர துணை முதல்வர் துரைராஜா இளங்கோ தலைமையில் இளைஞர்கள் குழு சிரமதானம் செய்து வருகிறது. குறித்த வீதிகள் திருத்தப்பட்டு அப்பகுதி மக்களின் பிரச்சினைகள் பல விரைவில் தீர்த்து வைக்கப்படும். அத்துடன் அப்பகுதியிலுள்ள கழிவுகள்,சந்தைக் கழிவுகள் என்பன உடனுக்குடன் அகற்றப்படுமென யாழ்.மாநகர முதல்வர் திருமதியோகேஸ்வரி பற்குணராசா குறிப்பிட்டார். (ச-5)

## பாகிஸ்தான் விமானப்படைத்தளபதி இன்று இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)


பாகிஸ்தான் விமானப்படை தளபதி எயார் மாஷல் ராவ் கமார் சுலைமான் இன்று இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். இலங்கை விமானப்படைத் தளபதியின் அழைப்பை ஏற்று அவர் இலங்கை வருகை தரவுள்ளதாக விமானப் படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது. அவர் இவ் விஜயத்தின் போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கூட்டுப்படைகளின் தலை மைதியதிகாரி சரத் பொன்சேகா உள்ளிட்ட அதிகாரிகளை சந்திக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் பாரிய பங்க ளிப்பை வழங்கிய பாகிஸ்தான் விமானப்படைத்தளபதியின் இந்த விஜயம் முக்கியத்துவம் மிக்கது என தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது. (ஓ-6)

# அர்த்தமுள்ள ஆன்மீகப் படிப்பினை

ஒருநாள் காலையில் பெண் பக்தர்கள் ஸ்வாமியை தரிசிப்பதற்காக பிரசாந்தி நிலைய மண்டபத்திற்குச் சென்றனர். அவர்கள் பெண்தொண்டர்களின் மேற்பார்வையில் அமைதி காத்து வரிசையாக நடந்தனர்.

ஆனால் ஒரு பெண் தொண்டர் அவர்களை அவசரப் படுத்தி உள்ளே அனுப்ப முயன்றபோது மரியாதையில்லாத சொற்களைப் பயன்படுத்திக்கொண்டு பட்டென்று பண்பில்லாது நடந்து கொண்டாள். பல பெண் மணிகள் இதனால் மனக் குழப்பம் அடைந்தனர். அவர்களில் ஒரு பெண்மணி பிரஸாந்தி நிலையத்திற்கு மனஅமைதி வேண்டி வந்திருக்கையில் இத்தொண்டரின் செயல் மனக் கலக்கத்தை அல்லவா ஏற்படுத்துகின்றது என அதிக வேத னைப்பட்டாள். அத்துடன் எவ்விதத்திலாவது சுவாமிக்கு இது பற்றி அறியத் தரவேண்டும் என்று நினைத்துக்கொண்டார்.

அப் பெண்மணியின் அதிர்ஷ்டவசமாக அன்று அவளுடன் வேறு சில பெண் பக்தர்களையும் பேட்டி தரும் அறைக்கு அழைத்திருந்தார் ஸ்வாமி. அந்தச் சந்தர்ப்பத்தில் அவர் தனது சொந்தக் கவலையைப்பற்றி சுவாமியிடம் கூறி ஆறுதல் அடைந்திருக்கலாம்.ஆனால் அவர் அனைவரும் மனக் கலக்கம் அடையும் அந்தப்பெண் தொண்டரின் பொருத்தமற்ற நடத்தையைப் பற்றிக் கூற நினைத்தாள். உடனே அவர் ஸ்வாமி, பெண்கள் பகுதியில் கடுமையான சொற்களைக் கூறிக்கொண்டு அதிகம் பேசிக்கொண்டிருந்த பெண் தொண்டரை அவதானித்தீர்களா? இந்த புனித இடத்தில் கூட எம் அமை தியைக் காத்துக்கொண்டிருக்கிறாள். நுழைவாயிலில் ஏன் அவரை நியமித்தீர்கள் ஸ்வாமி? என மன ஆதங்கத்துடன் ஸ்வாமியிடம் வினாவினார். உண்மையாகவே மனக் கலக்க முற்ற அந்தப் பெண்மணியிடம் ஸ்வாமி முன்பக்கம் சிறிது குனிந்து "உனக்கு நான் ஒரு இரகசியம் சொல்கிறேன். எனக்கும் அவளைக் கண்டு பயம் தான்" என கிண்டலாகக் கூறினார். அந்தப் பெண்மணி அதிசயத்துடனும் மிகுந்த மகிழ்ச்சியுடனும் பாபாவின் இரகசியத்தைக் கேட்டு கடகடவென சிரித்தார்.



இது பகவான் பற்றி ஸ்ரீ சத்திய சாயிபாபா தனது பக்தர்களுக்கு அளித்த அர்த்தமுள்ள ஆன்மீகப் படிப்பினையாகும். உண்மையாகமனக்காயம்அடைந்த பக்தரின் குறையை அத் தொண்டரின் முரட்டு நடத்தையைக் கேட்டு கோபிக்காது அன்பு மூலமாக கிண்ட லாக சமாதானப் படுத்தினார். ஸ்வாமி நீ மனம் உடைந்தால் என் இனிய சொற்களையும் கலகலப்பான உரையாடல்களையும் மனதிற்கொண்டு வந்து மகிழ்ச்சியடை அதன்மூலம் உன் துக்கத்தையோ மனப் புண்ணையோ சுலபமாக மறக்க உன்னால் இயலும் என்கிறார் ஸ்வாமி . வாழ்க்கையில் பிரச்சினைகளால் அல்லலடும்போது சுவாமியின் அருள் உரைகள், வலுவுள்ள உப தேசங்கள், கதைகள் இவற்றை நினைவுக்குக்கொண்டு வாருங்கள். உங்களது சஞ்சலங்கள் அனைத்தும் துடைத்து விடப்படும்.

ஜெய்சாயிராம் யாதவன்

## மனோகணேசன் தனது கொள்கையை மாற்றிக்கொள்வாரோ என்று எண்ணத்தோன்றுகிறது

### அமைச்சர் டிலான் பெரேரா

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி தலைமையிலான கூட்டணியில் ஜனரல் பொன்சேகா போட்டியிட்டால் கூட்டணியில் இருந்து விலகி விடுவதாக சில வாரங்களுக்கு முன்னர் அறிவித்திருந்த ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் தனது கொள்கையை மாற்றிக்கொள்வாரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. அவர் எதனை அடிப்படையாகக் கொண்டு இவ்வாறு நிலைப்பாடு மாறுகின்றார் என்று தெரியவில்லை என துறை முக அபிவிருத்தி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பு தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் இது தொடர்பில் மேலும் கூறியதாவது,

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான கூட்டணியில் ஜனரல் பொன்சேகா போட்டியிட்டால் கூட்டணியில் இருந்து விலகி விடுவதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

ஆனால் தற்போது மனோகணேசன் தனது கட்சியின் நிலைப்பாட்டை மாற்றிக் கொள்வரோ என்று எண்ணத்தோன்றுகின்றது. இதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. தற்போதைய கால கட்டத்தில் அரசியல் தலைவர்கள் கொள்கைகளுக்கு அப்பாற்பட்டு தீர்மானங்களை எடுக்க முயற்சிப்பது கவலைக்குரிய விடயமாகும்.

எனினும் மனோகணேசன் அவ்வாறு கொள்கையை மீறி தீர்மானம் எடுக்க மாட்டார் என்று நம்புகின்றோம்.

கொள்கைக்கப்பால் அவர் நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள மாட்டார் என்று கருதுகின்றோம். அது தொடர்பில் எமக்கு நம்பிக்கை உள்ளது. இடம் பெயர்ந்த மக்களை மீள் குடியேற்றும் வேலைத்திட்டம் தற்போது விரைவு படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் நான் வடமராட்சிப்பிரதேசத்திற்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றேன்.

அமைச்சர் மஹிந்தானந்த அளுக்கமகேவும் யாழ்ப்பாணத்தில் ஒரு தொகுதிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறான வேகத் தில் மீள் குடியேற்றம் இடம்பெறுமானால் எதிர் வரும் ஜனவரி மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் அனைவரையும் மீள் குடியேற்ற முடியும் என்று எதிர்பார்க்கின்றோம் என்றார். (ஓ-6)

## வலிகாமம் வலயப் பாடசாலைகளுக்கிடையிலான தாச்சிச் சுற்றுப்போட்டி இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயப்பாடசாலைகளுக்கிடையிலான தாச்சிப் போட்டிகள் இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் காலை 8.30 மணிக்கு மல்லாகம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள் ளன.

இதில் இன்று நடைபெறவுள்ள ஆண்களுக்கான போட்டிகளில் நாகேஸ்வரா வித்தியாலயத்தை எதிர்த்து வட்டு கார்த்திகேசு வித்தியாலயம் மோதவுள்ளதுடன் இதில் வெற்றி பெறும் அணி அளவெட்டி சதானந்தா வித்தியாலய அணியுடன் மோதவுள்ளது.

மயிலிட்டி கலைமகள் வித்தியாலய அணி பண்டத்தரிப்பு யசிந்தா றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையை எதிர்த்து மோதவுள்ளதுடன் இப் போட்டியில் வெற்றி பெறும் அணி வட்டு இந்துகல்லூரி அணியுடன் மோதவுள்ளது. தொல்புரம் அமெரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலை, மல்வம் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையை எதிர்கொள்கிறது.

இதில் வெற்றி பெறும் அணி பெரியவிளான், அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையை எதிர்கொள்ளும்.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியை எதிர்கொண்டு கட்டுவன்புலம் மகாவித்தியா லயம் விளையாடவுள்ளது.

இப்போட்டியில் வெற்றி பெறும் அணி உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயத்தை எதிர்கொள்கின்றன. இப்போட்டிகளில் வெற்றி பெறும் அணிகளுக்கிடையிலான அரை இறுதிப் போட்டி மற்றும் இறுதிப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும்.

இதேவேளை பெண்கள் பிரிவில் இன்று நடைபெறும் போட்டிகளில் உடுவில் அமெரிக்கன் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையை சுழிபுரம் ஆறுமுகவித்தியாலயம் எதிர்கொள்கிறது.

இப்போட்டியில் வெற்றி பெறும் அணி அளவெட்டி சதானந்தா வித்தியாலயத்தை எதிர்கொள்கிறது. இளவாலை கன்னியர் மடம் வித்தியாலயத்தை எதிர்த்து ஆனைக் கோட்டை பாலசுப் பிரமணிய வித்தியாலயம் மோதவுள்ளது. இப் போட்டியில் வெற்றி பெறும் அணி பெரிய விளான் அமெரிக்கன் மிஷன்பாடசாலையை எதிர்கொள்கிறது.

சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தியாலயத்தை எதிர்த்து புலமங்கால் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை அணி விளையாடவுள்ளது. இப்போட்டியில் வெற்றி பெறும் அணி பொன்னாலை வரதராஜப்பெருமாள் வித்தியாலயத்தை எதிர்கொள்கிறது.

மல்வம் றோமன்கத்தோலிக்க பாடசாலையை அணியை வீமன்காமம் வித்தியாலயம் எதிர்கொள்கிறது.

இப்போட்டியில் வெற்றி பெறும் அணி உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயத்தை எதிர் கொள்கிறது. இப்போட்டியில் வெற்றி பெற்று அரை இறுதிக்கு தெரிவாகும் அணிகளுக்கிடையிலான அரை இறுதி மற்றும் இறுதிப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும். (ஓ-14)

## நிர்க்கதியான நிலையில் சவூதியில் தங்கியுள்ள இலங்கையர்களை நாட்டிற்கு அழைத்து வரத் திட்டம்

(கொழும்பு)

சவூதி அரேபியாவில் நிர்க்கதியான நிலையில் தங்கியுள்ள இலங்கைப் பணியாளர்களை மீண்டும் நாட்டிற்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி சவூதி அரேவியாவில் நிர்க்கதியான நிலையில் காணப்படும் சுமார் 260 பேர் விரைவில் நாட்டுக்கு அழைத்து வரப்படவுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக ஆணையாளர் கிங்ஸ்லி ரணவக்க குறிப்பிட்டுள்ளார்.

பல்வேறு காரணிகளினால் ஜெட்டா நகர பாலத்திற்கு அடியில் தஞ்சமடையும் இலங்கைப் பணியாளர்களின் எண் ணிக்கை அண்மைக்காலமாக உயர்வடைந்துள்ள தென அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு நிர்க்கதியான நிலைக்கு தள்ளப்பட்டுள்ள சகல இலங்கையர்களுக்கும் தற்காலிக கடவுச் சீட்டுக்கள் வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

இலங்கை வங்கியின் மற்றுமொரு உன்னதமான சேவையை,
யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்
B.O.C TRAVELS (PVT) LTD
SUBSIDARY BANK OF CEYLON


★ சர்வதேச விமானசீட்டு விற்பனையும், முன் கூட்டிப் பதிவுகள்
★ இந்தியாவுக்கான யாத்திரை ஒழுங்குகள்
★ சர்வதேச, உள்ளூர் ஹொட்டல்களுக்கான முன்பதிவுகள்
★ உல்லாச பயணத்துக்கான ஏற்பாடுகள்
★ விசா, பாஸ் போட் ஒழுங்குகள்
★ பயணக் காப்புறுதி
★ இன்னும் அதிக சேவைகள்
மகிழ்ச்சிகரமான திறப்பு விழாவுக்கு உங்களை அன்போடு அழைக்கின்றோம்.
காலம்: 12.11.2009 வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு
இடம்: யாழ்ப்பாண இலங்கை வங்கி மேல் தரக்கிளை மேல் மாடியில்
B.O.C TRAVELS (PVT) LTD
SUBSIDARY BANK OF CEYLON
HOSPITAL ROAD, JAFFNA.
T.P.: 021 2224575
FAX: 021 2224576
WEB ADDRESS
www.boc travels.com
(C-3699)

## மின்சாரம் இன்மையால் மாணவர்கள் பாதிப்பு

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை ஊரிக்காடு நெற்கொழு ஒழுங்கையில் உள்ள சுமார் 15 வீடுகளுக்கு கடந்த சில வாரங்களாக மின்சாரம் வழங்கப் படவில்லை என தெரிவிக்கப்படு கின்றது.

இதனால் பாடசாலை மாணவர் கள் பெரிதும் பாதிக்கப்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது குறித்து மின்சார சபை யிடம் முறையிட்ட போதிலும் எது வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட வில்லை என அம் மக்கள் தெரிவித் துள்ளனர். (ச-3)

## புலிகளுக்கு உயிர் கொடுக்க சில சக்திகள் முயற்சி-திவயின

(கொழும்பு)

யுத்தரீதியாக தோற்கடிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமை ப்பிற்கு உயிர் கொடுக்க சில சக்தி கள் முயற்சி மேற்கொண்டு வருவ தாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

புலிகள் இயக்கம் மீண்டும் இயங்குவதாக வெளிக்காட்டும் வகையில் உள்நாட்டில் இயங்கி வரும் சிலர் முயற்சிகளை மேற் கொண்டு வருவதாக சுட்டிக்காட்டப் படுகிறது.

கடந்த 9ஆம் திகதி தமிழீழ விடு தலைப் புலிகள் தலைமையகத்தி லிருந்து வெளியானதாக புலிகளின் இணைய தளங்களில் வெளியான செய்தி தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஐரோப்பிய நாடுகளில் இயங்கி வரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் இணையதளங்களுக்கு குறித்த செய்தி கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

கொழும்பில் உள்ள சில ஊடக வியலாளர்கள் இந்த தகவல்களை அனுப்பி வைப்பதாக பாதுகாப்பு தரப்பினர் தகவல் வெளியிட்டுள் ளனர்.

இந்த விடயம் தொடர்பிலான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட் டுள்ளதாக திவயின செய்தி வெளி யிட்டுள்ளது. (ச-5)


**மணமகள் தேவை**

யாழ்ப்பாணம் சைவ சமயத்தைச் சேர்ந்தவரும் 29 வயது, Msc முடித்து Mechanical Engineer ஆகவும், Canadian PR, ஏழுச் செவ்வாய், பூச நட்சத்திரம் மொத்த பாவம் 30 உடைய வருக்கு, வைத்தியத் துறையில் படித்த, அல்லது படித்துக் கொண்டிருக்கும் மண மகள் தேவை.

தொடர்புகளுக்கு: 071 3163508 (3888)

**காணி விற்பனைக்கு**

வட்டுக்கோட்டை சங் கரத்தை பத்திரகாளி அம் மன் கோவிலுக்கு அருகா மையில் 10 பரப்பு நெல் வயல் காணியும் 15 பரப் புத் தோட்டக் காணியும் விற் பனைக் குண்டு.

தொடர்பு:-
077 3223038 (C-3703)


# வலயக் கல்வி அலுவலகம், வலிகாமம்
# பாடசாலை வேலைகளுக்கான
## கேள்வி அறிவித்தல் - 2009

'இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு' உலக வங்கியிடமிருந்து கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கென செலவுக்கான மானியத்தினைப் பெற்றுள்ளது. அதன் ஒரு பகுதி யை 'கற்கை தாரகை' (Learning Star) 'அறிவுக் கோபுரம்'(Tower of Knowledge) ஆகிய கட்டுமான நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான நிர்மாண வேலை ஒப் பந்தத்திற்கான கொடுப்பனவுகளுக்காகப் பெற்றுள்ளது. அந் நிதி ஒதுக்கீட்டிலிருந்து பின் வரும் வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரி னால் இக்ராட் (ICTAD)இல் பதிவு செய்து பதிவுச் சான்றிதழ் வைத்திருப்பவர்களிடம் இருந்து கோரப்படுகின்றது. கீழே தரப்பட்ட அட்டவணைப்படி வேலைகளுக்கான கேள்வி வைப்புப் பணத்தை வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரின் கணக்கில் வைப்புச் செய்து அல்லது வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தில் நேரடியாகச் செலுத்திப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

01. கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி: 12.11.2009 முதல் 19.11.2009 மதியம் 12.00 மணிவரை.
02. கேள்வி ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி: 20.11.2009 மு.ப. 10.00 மணி வரை.
03. கேள்வி திறக்கப்படும் திகதி : 20.11.2009 மு.ப. 10.30 மணி (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
04. கீழ்க் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்குப் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் விண்ணப்பிக் கலாம்.
05. கேள்வியினை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரம் உண்டு. சரியாக நிரப் பப்படாத தெளிவற்ற கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
06. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தக்காரர் தனது இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தை, பாடசாலைகள் வேலைகள் பொறியியலாளர், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம் அவர்களிடம் சமர்ப்பித்து சிபார்சுக் கடிதத்தினைப் பெறுதல் வேண்டும்.
07. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்தி செய்து மூலப் பிரதியும், எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப் படிவமும், கையொப்பமும், இறப்பர் முத்திரை என் பன இடப்பட்டு அவற்றினையும் கேள்விப் பத்திர இணைப் பிரதியினையும் தனித்தனி இரு கடித உறைகளில் இட்டு கடித உறையின் இடப்புற மேற்பக்கத்தில் வேலையின் விபரம் எழுதப் படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையிலிட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தகாரரின் முத்திரையிடப்பட்டு மருதனார்மடத்திலுள்ள வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் இடல்வேண்டும்.
08. கேள்விப் பத்திரங்களில் பெறுமதி சேர் வரி (Vat) 12% சேர்க்கப்பட்ட கேள்வித் தொகை, பெறுமதி சேர் வரி (Vat) 12% சேர்க்கப்படாத கேள்வித் தொகை என்பன தனித்தனி யாகக் குறிப்பிடல் வேண்டும். எனினும் இவ் நிபந்தனையும் மீளளிக்கப்படும் வைப்புப் பணம், மீளளிக்கப்படாத வைப்புப் பணம் என்பனவும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத் திற்கு விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது.
09. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் தெரிவு செய்யப்படும் திகதியிலிருந்து மார்கழி 15 ஆம் திகதிக்குள் அனைத்து வேலைகளையும் பூர்த்தி செய்து கையளிக்க வேண்டும். எதுவித காலதாமதங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விபரங்களை பாடசாலை வேலைகள் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

| இ ல. | விபரம் | மீளளிக்கப் படாத வைப் புப் பணம் | மீளளிக்கப் படும் வைப் புப் பணம் | இக்ராட் இல. |
|---|---|---|---|---|
| 01. | யாழ்/யூனியன் கல்லூரி மலசல கூட நிர்மாணம் | 250.00 | 1600.00 | M9/C10 |
| 02. | யாழ்/கந்தரோடை தமிழ் கந்தையா வித்தி. மலசல கூட நிர்மாணம் | 250.00 | 1600.00 | M9/C10 |

பாடசாலை வேலைப் பகுதி,
வலிகாமம் வலயம்.

ப.விக்னேஸ்வரன்
வலயக் கல்விப் பணிப்பாளர்

(C-3700)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி ஜெ.வரதராசா அவர்களின் அன்புத் தந்தை
அமரர்
**ஆறுமுகம் கனகலிங்கம்**

இறைபதம் எய்தியமையிட்டு அவர் தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பா.அ.வி.சங்கம்

(3916)

## சர்வதேச HIV/AIDS தினத்தையொட்டி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினால் நடாத்தப்படவுள்ள சுவரொட்டி போட்டி - 2009
### (Poster Competition - 2009)

போட்டி விபரம் :-

1ம் பரிசு : ரூபா 10000/=
2ம் பரிசு: ரூபா 7500/=
3ம் பரிசு: ரூபா 5000/=

ஆறுதல் பரிசுகள் : தலா ரூபா 2000/= ப்படி (5 பேருக்கு)

பரிசுத் தொகை தலா இரண்டு பிரிவுகளுக்கும் தனித்தனியாக வழங்கப்படும்.

போட்டித் தலைப்பு : HIV இல் இருந்து எம்மைப் பாதுகாப்போம்.
தாளின் அளவு : 18"x14"
வர்ண ஊடகம் : விரும்பியது
போட்டிப் பிரிவு : பிரிவு 1. பாடசாலை மாணவர்களுக்குரியது (தரம் 10 உம் அதற்கு மேற்பட்டதும்)
பிரிவு 2. திறந்த போட்டி
விண்ணப்ப முடிவுத் திகதி : 19.11.2009

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:
பணிப்பாளர்,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,
யாழ்ப்பாணம்.
572/3, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்,

கடித இடது பக்க தபால் உறையில் குறிப்பிடல்:
சுவரொட்டி போட்டி - 2009
(சர்வதேச HIV/AIDS தினம்)

**சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவம் பின்வரும் விடயங்களை உள்ளடக்கியிருக்க வேண்டும்**

**பிரிவு 1**

1. மாணவ/மாணவியின் முழுப் பெயர் :-..........................
2.தற்போது கல்வி பயிலும் தரம் :-..........................
3.பிறந்த திகதி:- ஆண்டு.......... மாதம்......... திகதி..........
4.பாடசாலையின் பெயர் :-..........................................
..........................................
5. பாடசாலை தொலைபேசி இலக்கம் (இருப்பின்):- ..................
6.வீட்டு முகவரி:-..........................................
7.பாடசாலை அதிபரின் சிபார்சு:-

**பிரிவு 2**

1. முழுப் பெயர் :-..........................................
2.பதவி/தொழில் :-..........................................
3.முகவரி :-..........................................
4.தொலைபேசி இலக்கம் :-..........................................

மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் தங்களது விண் ணப்பப் படிவத்தினை 19.11.2009 ந் திகதிக்கு முன்னர் மேற் குறிப்பிட்ட முகவரிக்குத் தபால் மூலம் அல்லது நேரடியாக கை யளிக்கலாம்.

சுவரொட்டி போட்டி 21.11.2009 ந் திகதி அன்று நடைபெறும் பரீட்சை நிலையம், நேரம் என்பன பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

மேலதிக தொடர்புகளுக்கு :- 1. 021 222 2278
:-2. 021 222 8966

நிதியுதவி UNHCR அனுசரணை TRRO

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,
யாழ்ப்பாணம்.

(C-3701)

# யாழ்ப்பாணம்–கொழும்பு நேரடி பஸ் சேவை ஆரம்பம்

(யாழ்ப்பபா்ணம்)

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையே நேரடி பஸ் சேவை நேற்று தொடங்கப்பட்டது. நேற்று புதன்கிழமை காலை வைபரீதியாக இந்த நேரடிசேவை தொடங்கப்பட்டது.

தினசரி மூன்று பஸ்கள் ஏ-9 வீதியூடாக கொழும்பு செல்லும் இவற்றில் இரண்டு அரைச்சொகுசு பஸ்கள் மற்றொன்று சாதாரண பஸ்.

யாழ்ப்பாணத்துக்கும் நாட்டின் தென் பகுதிகளுக்கும் இடையே தரைவழிப் போக்குவரத்து யுத்த காலத்தில் தடைப்பட்டிருந்தது. சமீபத்தில் யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையே பஸ் போக்குவரத்து தொடங்கப்பட்ட போது இதில் பயணிக்கும் பயணிகள் வவுனியா அருகே உள்ள மதவாச்சி சோதனைச்சாவடி வரையிலும் ஒரு பஸ்ஸில் சென்று பின்னர் அங்கிருந்து சோதனைச்சாவடியைத் தாண்டி வேறு ஒரு பஸ் அல்லது இரயில் வண்டிகள் மூலமாக தங்களது பயணத்தை தொடர வேண்டிய நிலை இருந்து வந்தது.

இந்தநிலை இப்போது தொடங்கப்பட்டுள்ள நேரடிப் போக்குவரத்து மூலம் மாறி பயணிகள் வடக்கிலிருந்து கொழும்புக்கு தடையில்லாமல் நேரடியாக பயணிக்க கூடிய வசதி ஏற்பட்டுள்ளது என்று அதிகாரிகள் கூறினர்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்ல விரும்பும் பய்ணிகள் வழமை போல அவர்களது பகுதிகளில் இருக்கும் இராணுவ அதிகாரிகளிடம் அனுமதி பெற்ற பின்னரே இந்தப் பஸ்களில் செல்லமுடியும். அதேபோல யாழ்ப்பாண மக்கள் மட்டுமே இந்த பஸ் சேவையைப் பயன் படுத்த முடியும் என்றும் கொழும்பிலிருந்து மக்கள் யாழ்ப்பாணம் செல்ல இந்த சேவையைக் பயன்படுத்த தற்போது முடியாது என்றும் கூறப்பட்டது.

இதேபோல யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு விமானம் அல்லது கப்பல் மூலம் செல்பவர்கள் மீண்டும் அவர்கள் பயணித்த அதே வழியிலேயே திரும்ப வேண்டும் என்ற தற்போதைய நடைமுறையும் தொடர்ந்து அமுலில் இருக்கும். (ச–3,5)

# வவுனியா முகாம் மக்களைச் சந்திக்க எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு அனுமதி

(கொழும்பு)

வவுனியா பகுதியில் உள்ள இடைத்தங்கல் முகாம்களில் இருக்கும் மக்களை சந்திக்கும் முகமாக எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் உட்பட மீள்குடியேற்ற அமைச்சகத்தின் ஆலோசனைக் குழுவில் இடம்பெற்றுள்ள 32பேர் அங்கு செல்வதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளதாக மீள்குடியேற்ற அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தமிழோசையிடம் தெரிவித்தார்.

அந்தக் குழுவில் வன்னிப் பகுதி நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட நாடாளு மன்றத்தில் இருக்கின்ற அனைத்து கட்சிகளின் உறுப்பினர்களும் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் கூறினார். அவர்கள் எதிர்வரும் செவ்வாய் அல்லது புதன்கிழமை அங்கு செல்லவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் கூறினார்.

எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனியாக வவுனியா முகாம்களுக்கு சென்றுவர அனுமதி கோரினால் அது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற்று அவர்கள் அங்கு சென்று வருவதற்கு வழி செய்யப்படும் என்றும் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவிக்கிறார்.

மீள்குடியேற்ற அமைச்சகத்தின் ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்கள் அங்கு சென்று வந்த பிறகு அவர்கள் தெரிவிக்கும் ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களை அரசு ஆக்கபூர்வமாக பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் எனவும் இலங்கையின் மீள்குடியேற்ற அமைச்சர் கூறுகிறார். (ச–3,5)

## சுதந்திரக் கட்சியின் தேசிய...

இந்தக் கூட்டத்தின் போது வெளியிடப்பட மாட்டாது என அந்தக் கட்சியின் தலைமையகத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேர்தல் குறித்து எந்தக் கருத்துக்களையும் கூறவேண்டாம் என ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷ ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுத்திருப்பதாக அந்தத் தகவல்கள் மேலும் தெரிவித்தன.

அதேவேளை சோதிட பலன்களின் அடிப்படையில் நவம்பர் 19ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் குறித்த அறிவிப்பை வெளியிட்டு 2010 ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலை நடத்த மகிந்த ராஜபக்ஷ சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்த நிலையில் ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்குமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோதபாய ராஜபக்ஷ நேற்று முன்தினம் பிற்பகலில் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமாக தீர்மானமொன்றை எடுப்பதற்காகவும், கூட்டுப் படைகளின் தலைமை அதிகாரியாக வசந்த கருண்ணா கொடவை நியமிப்பது குறித்தும் கலந்து ரையாடுவதற்காக ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட சிலரை அலரி மாளிகைக்கு நேற்று அழைத்துள்ளார். இந்தச் சந்திப்பில் ஊவதென்னே சுமண தேரரும் கலந்துகொண்டுள்ளார். (ச–5)

## சிவில் நிர்வாகம்...

தகவல் தருகையில், யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட வீதிகளில் அமைக்கப் பட்டிருந்த படையினரின் முகாம்கள் நாம் கேட்டுக் கொண்டதற்கிணங்க அகற்றப்பட்டுவிட்டன.

எனினும் படையினரின் முகாம்களை முழுமையாக அகற்றப்பட்டால் களவு உட்பட பல சமூகசீரழிவுகள் இடம்பெற வாய்ப்புண்டு. எனவே யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகம் முழுமையாக நடைமுறைக்கு வரும் வரையில் சில பகுதிகளில் படையினரின் முகாம்கள் இருப்பது அவசியம்.

குறிப்பாக தற்போது யாழ்.மாவட்ட இளைஞர்கள் பொலிஸ் சேவைக்கு இணைக்கப்பட்(டு) [illegible]ளதனால் அடுத்த வருட ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் முழுமையாக சிவில் நிர்வாகம் அமுல் படுத்தப்பட்டுவிடும் என யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா மேலும் குறிப்பிட்டார். (ச–5)

## புலிகளின் செயற்பாடுகளை...

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட தென்னாபிரிக்க அமைச்சுக்கும் இலங்கை வெளிவிவகார அமைச்சருக்குமான சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றது.

இச்சந்திப்பு நேற்று மாலை வெளிவிவகார அமைச்சில் இடம்பெற்றது.

நாடுகடந்த தமிழீழ இராச்சியத்திற்கான தேர்தல்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் நடத்தப்படும் என செயற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளதாக அமைச்சர் போகொல்லாகம சுட்டிக் காட்டியுள்ளார்.

எனினும் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப்பட மாட்டாது என தென் ஆபிரிக்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இலங்கையை வந்தடைந்த தென்னாபிரிக்க அமைச்சர் நேற்றுக்காலை வவுனியா நலன்புரி முகாம்களுக்குச் சென்று அங்குள்ள மக்களை பார்வையிட்ட நிலையில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இந்த சந்திப்பில் முகாம்மக்களின் நிலைமைகள் குறித்தும் அங்குள்ள மக்களுக்கு தேவையான வசதிகள் மற்றும் இலங்கை அரசாங்கத்தினால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ள வசதிகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் மீள்குடியேற்றம், கண்ணிவெடி யகற்றுதல் குறித்த கலந்துரையாடல்களுடன் இருநாட்டின் வர்த்தக மற்றும் சிநேகபூர்வ ஒத்துழைப்புகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பின் போது தென்னாபிரிக்க வெளிவிவகார அமைச்சர் இலங்கையில் கடந்த 30 வருட காலமாக இடம்பெற்று வந்த யுத்தம் முடிவிற்கு வந்ததையிட்டு மகிழ்ச்சியும் பாராட்டுக்களையும் தெரிவித்ததாக வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம குறிப்பிட்டார்.

இந்த சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவித்த தென்னாபிரிக்க அமைச்சர், இலங்கையில் துப்பாக்கிகள் மெளனிக்கப்பட்டு சமாதானம் நிலவியுள்ள தாக குறிப்பிட்டார்.

இவர் நேற்று வவுனியா முகாம்களுக்கு சென்றவேளை அங்குள்ள சிறுவர்கள் பாடசாலைகளுக்கு சென்றதையும், படையினர் சிறுவர்களுக்கு பாதுகாப்பாக இருப்பதனையும், பெற்றோர் மகிழ்ச்சியாக தமது மறு வாழ்வினை வாழ்வதற்கு தயாராக இருப்பதனையும் கண்ணுற்றதாக குறிப்பிட்டார்.

யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் சமாதானத்தை நோக்கிய பயணம் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் சமாதானத்துடன் கூடிய அபிவிருத்திக்கான பயணத்திற்கு தென்னாபிரிக்காவும் தனது முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச–5)

## புலிகளின் கப்பல்களை தகர்...

வருகின்ற போதிலும் உலக நாடுகள் ஒத்துழைப்பு வழங்கியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச அரங்கில் இலங்கை தனிமைப் படுத்தப்படக் கூடிய அபாயம் இருப்பதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொள்ள முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய ஆயுதக் கப்பல்களை தகர்ப்பதற்கு அமெரிக்கா ஒத்துழைப்பு வழங்கியிருந்ததாக ஜனாதிபதி முதல் முறையாக ஒப்புக் கொண்டுள்ளார்.

2007ஆம் ஆண்டில் இலங்கைக் கடற்படையினரால் தமிழீழ விடுதலைப் புலிகளின் எட்டு ஆயுதக் கப்பல்கள் அழிக்கப்பட்டதாகவும் இதில் நான்கு கப்பல்களை அழிப்பதற்கு வெளிநாட்டு சக்திகள் ஒத்துழைப்பு வழங்கியிருந்ததாகவும் ஆங்கில ஊடகமொன்று சுட்டிக்காட்டியுள்ளது.

யுத்த நடவடிக்கைகளின் போது அநேக நாடுகள் இலங்கைக்கு ஆயுதங்களை விநியோகம் செய்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அலரி மாளிகையில் ஊடகவியலாளர்களுடன் நடைபெற்ற விசேட சந்திப்பொன்றின் போது ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சர்வதேச அரங்கில் பலத்த ஆதரவு காணப்பட்டதாகவும் தமது ஆட்சிக் காலத்தில் இந்த ஆதரவினை இல்லா தொழித்து யுத்தத்தை வெற்றி கொண்டதாக அவர் தெரிவித்துள்ளார். (ச–5)

## வடமாகாண தொண்டர் ஆசிரி...

நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கப்பட வேண்டுமென நீண்டகாலமாகக் கேட்டுவந்தனர்.

இதற்கமைவாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொண்டர் ஆசிரியர்களின் கோரிக்கையை யேற்று ஜனாதிபதி, பிரதமர், கல்வியமைச்சு ஆகியோரிடமும், அமைச்சரவையிலும் அனுமதி கேட்டிருந்தார்.

இந்நிலையில் அண்மையில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்தவை நேரில் சந்தித்து சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிரந் தர ஆசிரியர் நியமனம் வழங்கப்பட வேண்டியவர்களின் பட்டியலை கையளித்தார்.

இதன் பிரகாரம் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த அமைச்சரவையின் ஒப்புதலுக் கமைவாக 530 தொண்டர் ஆசிரியர்களுக்கும் ஆசிரியர் உதவியாளர் பதவி நியமனம் வழங்குமாறு வடக்கு மாகாணக்கல்வி அமைச் சின் செயலாளருக்கு அறிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே வடக்கு மாகாண கல்வி அமைச்சு 530 தொண்டர் ஆசிரியர்களுக்கும் நாளை மறுதினம் ஆசிரியர் உதவியாளர்கள் நியமனத்தை வழங்குகின்றது. இவ் விழாவில் ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியும் கலந்து கொள்கிறார். (ச–5)


## தொழிற் பயிற்சிகள்

எங்கள் நிறுவனத்தில் தொழிற்கல்விகளை பயில்வதன் மூலம் உங்கள் எதிர்காலத்தை வளமாக்குங்கள்

☆ ரேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங்

★ ரேடியோ ★ வீடியோ டெக் ★ DVD Player

★ ரெலிவிசன் ★ CD Player ★ Amplifier காலம்:-10மாதம்

☆ Mobile Phone Repairing

Hard ware Hard ware Repairing

Soft ware Phone Lock காலம்:-3மாதம்

☆ ஏயார் கொண்டிசனிங்

சகல குளிர்சாதனங்களும் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும். காலம்:-6 மாதம்

☆ எலக்ரிக்கல் வயறிங், றீவைண்டிங் காலம்:-6மாதம்

☆ Diploma in computer Hard ware Engineering காலம்:-3மாதம்

☆ மோட்டார் சைக்கிள் மெக்கானிசம்

நீர் இறைக்கும் இயந்திரம், மோட்டார் சைக்கிள் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும். காலம்:-6மாதம்

பயிற்சியில் சேரவிரும்புவோர் 15.11.2009 முன் விண்ணபத்தை பெற்று விண்ணப்பிக்கவும்

குறிப்பு: நலன்புரி முகாமில் இருந்து விடுவிக்கப்பட்டவர்களிற்கு எந்த வித கட்டணமும் அறிவிடப்படமாட்டாது.

JAFFNA TECHNICAL INSTITUTE

No.45, மணிக்கூட்டு வீதி(பெருமாள் கோவில் முன் வீதி), யாழ்ப்பாணம்.
T.P:- 0718561654

கிளை: NEW ASIAN CENTER
56/15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P:- 0779254078

ஒவ்வொரு பயிற்சிக்கும் 20 மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர்.

(C-3690)


## கடந்த மூன்று வருடங்...

காணப்படாத சடலங்கள், இனந் தெரியாத படுகொலைகள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக மூவர் அடங்கிய விசேட ஆணைக்குழுவின் தலைவர் மஹானாம திலகரட்ன தெரிவித்துள்ளார்.

நாட்டில் மொத்தமாக 410 பொலிஸ் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளதாகவும் இந்த பொலிஸ் நிலையங்களுக்கு நாள் தோறும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எனினும் குற்றச் செயல்கள் தொடர்பில் பொலிஸாரின் செயற்பாடுகள் திருப்தி அளிக்கும் வகையில் அமையப்பெறவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சில குற்றச் செயல்கள் தொடர்பில் பொலிஸார் அசமந்தப் போக்கினை பின்பற்றுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

சரியான முறையில் விசாரணைகளை நடத்தி நீதியை நிலைநாட்டுவதற்கு பொலிஸார் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ச–5)

## இலங்கைக்கு...

ஆழ்கடல் சுற்றுக்காவல் கப்பல் களை இலங்கை கடற்படைக்கு அன்பளிப்பாக வழங்கியிருந்தது. தற்போது அரசு இந்த பீரங்கி கப்பல்களை பயன்படுத்தி மிகப் பெரும் மனித அழிவுகளுடன் போரை நிறைவு செய்துள்ள நிலையில் அதனை மீளப் பெற்றுக்கொள்ள இந்தியா திட்டமிட்டுள்ளது. எனினும் இலங்கை கடற்படையினர் அதனை மீண்டும் ஒப்படைப்பதற்கு தயக்கம் காட்டி வருகின்றது.

தாம் சீனா மற்றும் பாகிஸ்தானிடம் ஆயுதங்களை பெற்றுக்கொள்வோம் என்ற மிரட்டல்களின் அடிப்படையில் 2 கப்பல் களையும் நிரந் தரமாக வைத்துக் கொள்ள இலங்கை திட்டமிட்டுள்ளது. பீரங்கிகள் பொருத் தப்பட்ட இந்த கப்பல்களில் உலங்குவானூர்திதரித்து செல்லும் வசதிகளும் உண்டு என்பது குறிப்பிடத்தக்கது. (ச–5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.11.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.